சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7 | இதழ்: 10 | மார்ச் - 2026 | விலை - ரூ.20/-

VOL:7 | ISSUE: 10 | March - 2026 | Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.320/- மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-10 மார்ச்-2026

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வது தான் வெற்றி கரமான வாழ்க்கையின் பூரண இரகசியம். இந்த உண்மையை உணர்ந் தவர்கள் வாழ்வில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள் என்பதை எப்போதும் மனதில் வைத்துக்கொள்!

தெளிந்த நீரோடை போல மனது தெளிவாக இருக்க வேண்டுமானால் சில அடிப்படைக் கொள்கைகளைக் கட்டாயம் நீ கடை பிடிக்க வேண்டும். இதில் மிக முக்கியமானது இருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடையாமல், இல்லாததை எண்ணி ஏக்கம் கொள்வது.

உன் மகிழ்வான பொழுதுகளை முழுவதுமாக கெடுக்க கூடிய வல்லமை பெற்றது, உன்னிடம் இல்லாத ஒன்றை எண்ணி ஏக்கம் கொண்டு நிம்மதியைத் தொலைப்பது தான். மகிழ்ச்சி என்பது என்றுமே இன்னொருவரால் வரக் கூடியது அல்ல! மகிழ்ச்சியோ, துக்கமோ இதில் எதைத் தேர்ந்தெடுக்கப் போகிறாய் என்பது உன்னிடமே உள்ளது.

அதற்கு முதல் படியாக உன்னுடைய தேவைகளைக் கட்டுக்குள் கொண்டு வர வேண்டியது அவசியம். இந்த எண்ணத்தில் நீ உறுதியாக இருக்க வேண்டும். தேவைகளைக் குறைத்தால் தெய்வத் தன்மை தானே வரும். எனவே கவலை கொள்ளாதே. நம்பிக்கையோடு செயல்படு. நீ எடுக்கும் எல்லா முயற்சி களிலும் உனக்கு வெற்றி கிடைக்கும். நான் உன்னுடனே இருக்கின்றேன்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் பேரருளால் தொண்ணூற்று இரண்டாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 9/1கி, பழனியப்பா இரண்டாவது தெரு, சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.



இம்மாத இதழை சாயி பக்தை திருமதி. சுமதி ராமூர்த்தி அவர்கள் வெளியிட, திருமதி. ரமணி ராமலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள். விழாவில்,

"பாராயணப்பகலவன்"





திரு. சுந்தர்சாய், திருமதி. ஜெயந்தி, திருமதி. மாதங்கி, திருமதி. காயத்திரி, திருமதி. தனம், திருமதி. சுகுணா, திருமதி. மஞ்சுளா, திரு. சிவராமன், திரு அகஸ்டின், திரு. ராஜசேகர், திரு. கோபி, ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

திரு. பிரபு அவர்கள் நிகழ்ச்சி யினை தொகுத்து வழங்கினார்கள். சாய் தினானாலயா ஆத்ம ஞான பீடத்தின் அன்னதானக் குழுவினர் வந்திருந்த பக்தர்களுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர்.

இவ்வுலகினில் "மாற்றம் ஒன்றே மாறாதது" உங்களுக்குள் நீங்கள் மாற்றம் காணாவிட்டால் அடுத்த வரின் வாழ்க்கையை மாற்றவோ, வழி நடத்தவோ ஒருபோதும் முனையாதீர்கள் என்பது தத்துவ ஞானிகளின் வாக்கு!

இங்கு யாரையும் மாற்றுவதற் காக யாரும் பிறக்கவில்லை! எனவே எவரையும் மாற்ற முயற்சிக் காதீர்கள். அது வெளி நபர்கள் என்றில்லை உங்கள் மனைவியோ, மகனோ, மகளோ இல்லை உடன் பிறந்தவர்களையோ ஒரு போதும் மாற்ற முயற்சிக்காதீர்கள்.

உங்களையே நீங்கள் அறியாத வரை, நீங்கள் மிகவும் ஆபத்தானவர் என்பதால், உங்களது வழிகாட்டல் இங்கு யாருக்கும் தேவையில்லை. உங்கள் வழிகாட்டுதல் படியும், உங்கள் யோசனைப்படியும் நீங்கள் மற்றவர்களை கட்டாயப் படுத்த லாம். மேலும் உங்களின் அறிவுரை யின்படி நடக்காதவர்களிடம் கோபம் காட் டலாம். அவர்களை முடக்கலாம், அடக்கலாம், காயப் படுத்தலாம். ஆனால் அவர்களின் உண்மையான உள்முக மாற்றத்திற்கு உங்களால் ஒருபோதும் உதவ முடியாது.

உங்களுக்குள் நீங்கள் மாற்றப் படாதவரை மற்றொருவரின்



வாழ்க்கைக்கு செல்லாதீர்கள். நீங்கள் ஞானத்தின் ஒளியால் முழுமையாக நிரப்பப்பட்டால், நீங்கள் உதவலாம். இன்னும் சொல்லப்போனால் உங்களுக்குள் மாற்றம் வந்துவிட்டால் உண்மையில் நீங்கள் அடுத்தவர்களுக்கு உதவி செய்ய எந்த முயற்சியும் செய்ய வேண்டிய அவசியமில்லை.

ஏனெனில் விளக்கில் இருந்து ஒளி பாய்வது போலவோ, மலரிலிருந்து நறுமணம் பரவுவது போலவோ, இரவில் சந்திரன் பிரகாசிப்பது போலவோ உங்களிடமிருந்து உதவி அதுவாகவே அடுத்தவருக்குப் பாய்கிறது.

மலர் அதன் நறுமணத்தை பரப்புவதற்கு இந்த முயற்சியும் செய்வதில்லை. சந்திரனின் அதன் ஒளியை எங்கும் பரப்புவதற்கு எந்த பிரயாசையும் எடுத்துக் கொள்வதில்லை. அது அதனின் இயல்பாகவே எங்கும் பாய்கிறது.

உங்களுடைய உள் முகம் மாற்றத்தின் மூலம் நீங்கள் உங்களுக்கு ஒளியாக மாறினால், நீங்கள் மற்றவர்களுக்கு வெளிச்சமாகி விடுகிறீர்கள். இதுவே உங்களின் இயல்பான நிலையாகி விடுகிறது. இதை ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள். எனவே "யாரையும் எதையும் மாற்ற முயற்சிக்காதீர்கள். மாற முயற்சியுங்கள்"

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 90 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந்தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திரு. ராஜகோபாலன், பெங்களூர்.ரூ.500.
திரு.லோகேஸ்வரி கார்த்திக், வாடிப்பட்டி. ரூ.500.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திருமதி. லதா பாஸ்கரன்.சென்னை. ரூ.200.
திருமதி. காயத்திரி, மானா மதுரை. ரூ.200.
திருமதி. சுசீலாகோபாலன். சென்னை. ரூ.100.
திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.100
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.


எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதை பதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

சாய்சரிதம்-24

கதை வடிவில்

கருணைக்கடலான பரப்பிரம்மும், மாபெரும் யோகீஸ்வரனுமான சாயிநாதருக்கு நமது எட்டு அங்கத்தினாலும் வணங்கிவிட்டு, இந்த அத்தியாயத்தினை தொடங்குவோம். ஞானிகளின் மணிமகுடமாகவும்,எல்லா புனிதங்களின் இருப்பாகவும், தம்மை நாடும் பக்தர்களுக்கு அடைக்கலமாக மாகவும் விளங்கும் சாயிநாதருக்கு ஜெயம் உண்டாகட்டும். வாழ்க்கையின் இலட்சியமான குறிக்கோளை அடைய அவரது பாதாரவிந்தங்களை பணிந்து வணங்குவோம்.

சாயிபாபா எப்போதும் கருணை மிகுந்தவராக இருக்கின்றார். அவரின்மேல் முழுமனதான பக்தி மட்டுமே நமக்குத் தேவையாகும். உறுதியான நம்பிக்கையும்,



பக்தியும் ஒரு பக்தன் பெறும்போது அவனது விருப்பங்கள் விரைவில் நிறைவேறுகின்றன.

பாபாவினுடைய வாழ்க்கையையும், அவர்தம் லீலைகளையும் எழுத வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் வந்தபோது உடனடியாக அதை எழுதிவிடவேண்டும் என்று நான் சற்று உணர்ச்சிவசப்பட்டேன். குறிப்புகள், பக்தர்களின் ஞாபகங்கள் இவைகளை சேகரித்துக்கொள் என்று பாபாவினால் உத்தரவு கொடுக்கப்பட்ட போதே நான் உள்ளத்தளவில் தயாராகிக்கொண்டேன். எனது அறிவு வேலையை முடிப்பதற்கு வேண்டிய உறுதியையும், தைரியமும் பெற்றது.

இப்பணியை செய்வதற்கு எனக்கு கொஞ்சமும் தகுதியில்லை என்றாலும் பாபாவின் அருள் நிறைந்த ஆசீர்வாதங்களே நான் மேற்கொண்ட பணியை சிறப்பாக முடிக்க உதவியாக இருக்கும். சத்சரிதம் என்ற கிணற்றில் இருந்து, சாயி லீலைகள் என்ற அமிர்தம் ஊறிவருகின்றது. படிப்போர் அதை மனதாரப் பருகுங்கள்.

சாயி பாபாவின் மீது எந்த பக்தனுக்கு முழு மனதான பூரண பக்தி வருகிறதோ அவனது கேடுகளும், அபாயங்களும் விலக்கப்பட்டு அவனது நலம் சாயிபாபாவால் கவனிக்கப்படுகிறது. அகமது நகரைச்சேர்ந்த, "தாமோதர் ஸாவல்ராம் ராஸனே காஸார்" என்ற தாமு அண்ணா என்பவரின் கதை இக்கருத்தை மிக நன்றாக விளக்குகிறது.

தாமு அண்ணாவிற்கு இரண்டு மனைவிகள் இருந்தும் குழந்தையில்லாத நிலையில், சாயிபாபாவின் அருளால் குழந்தை பிறந்ததற்கு நன்றி கடனாக ஸ்ரீராம நவமி அன்று சீரடிக்கு ஒவ்வொரு வருடமும், அலங்காரக் கொடியை ஊர்வலமாக கொண்டுவந்து, அவ்விழாவிற்கு வருகைதரும் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்தினார்.

ஒரு முறை தாமு அண்ணாவிடம் அவரது நண்பர் ஒருவர் இவ்வருடம் பருத்தி அமோகமாக விளச்சல் கண்டுள்ளதால் நாம் இருவரும் இணைந்து பருத்தி வியாபாரம் செய்தால் லட்ச லட்சமாக சம்பாதிக்கலாம். இந்த நல்ல வாய்ப்பை தவறவிட்டுவிடாதே! என்று ஆசைமூட்டி விட்டார். தாமு அண்ணாவிற்கோ இது விசயமாக உடனடியாக ஒரு



– வே.ஸ்ரீராம்

முடிவெடுக்க முடியவில்லை. எனவே இதுபற்றிய விளக்கங்களை ஒரு கடிதமாக எழுதி பாபாவின் பதிலைப் பெற்று அனுப்புமாறு சாமாவிற்கு அனுப்பினார்.


கடிதத்தை பெற்றுக்கொண்ட சாமா, அதை அன்று மதியம் மசூதிக்கு எடுத்துச்சென்று பாபாவின்முன் வைத்தார். உடனே பாபா அது எதைப்பற்றிய கடிதம் யாரிடம் இருந்து வந்தது என்றார். தாமு அண்ணா தனது வியாபாரத்தைப்பற்றி தங்களிடம் சில விசயங்களை கேட்க விரும்புகின்றார் என்றார் சாமா.

அவன் என்ன எழுதியிருக்கிறான்? என்ன திட்டம் போடுகிறான்? கடவுள் கொடுத்ததைக் கொண்டு திருப்தியடையாமல் ஆகாயத்தை பிடிக்க முயற்சி செய்கின்றானா? எங்கே அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படி என்றார் பாபா.

அதற்கு சாமா, தாங்கள் இப்போது என்ன கூறினீர்களோ அதைத்தான் இந்தக் கடிதமும் கூறுகிறது. ஓ! இறைவா, நீங்கள் இங்கே அமைதியாக அமர்ந்து கொண்டு, பக்தர்களை குழப்ப மடையச்செய்து அவர்கள் அமைதியை இழந்து தவிக்கும் போது சிலரை கடிதம் மூலமாகவும், சிலரை நேரிடையாகவும் இங்கு இழுக்கின்றீர். தாமு அண்ணா கடிதத்தில் எழுதியுள்ள விசயம் உங்களுக்குத் தெரியும் என்றால், என்னை ஏன் படிக்கச்சொல்லி வற்புறுத்துகிறீர்கள் என்றார்.

உடனே பாபா, ஓ! சாமா தயவு செய்து அதைப்படி. நான் ஏதாவது பேசுவேன். என் பேச்சை யார் இங்கு நம்புவார்கள்? என்றார்

அதன்பின்பு அக்கடிதத்தை சாமா வாசிக்கலானார். பாபா அதைக் கவனமுடன் கேட்டுவிட்டு உணர்ச்சி பொங்கக்கூறினார். அண்ணாவிற்கு பைத்தியம் பிடித்துவிட்டது. அவனது



வீட்டில் மூன்று தலைமுறைக்கு சொத்து சேர்க்கத் தேவையில்லை. இப்போதைக்கு இருப்பதை கொண்டு திருப்தியடையும் படியும், லட்சங்களைக்கண்டு கவலைப் படாமல் இருக்கும்படியும் கூறி கடிதம் எழுது என்று கூறினார்.

சாமா உடனடியாக தாமு

அண்ணாவிற்கு பாபா கூறிய விசயங்களை எழுதி கூடவே, எதற்கும் நீங்கள் நேரில் வந்து பாபாவிடம் கலந்து ஆலோசிப்பதே மிகவும் சரியானது என்று எழுதியிருந்தார். கடிதத்தைப் படித்துப்பார்த்த தாமு அண்ணா, இது விசயமாக பாபாவிடம் ஆலோசித்திருக்க வேண்டாம் என்று நொந்து கொண்டார்.

இருப்பினும் சாமா குறிப்பிட்ட படி நேரில் சென்று கேட்பதே சரியானது என்று சீரடிக்குப் புறப்பட்டார்.

அண்ணா சீரடிக்கு வந்து மசூதி யில் அமர்ந்திருந்த பாபாவைப் பணிந்து அவரின் கால்களை பிடித்து பணிவிடை செய்து கொண்டிருந்தார். அப்போது தனது வியாபாரம் சம்பந்தமாக பாபாவிடம் வெளிப்படையாக கேட்ட அவருக்கு தைரியம் வரவில்லை. எனவே அவர் மனதிற் குள்ளாக, நான் நினைத்திருக்கும் வியாபாரத்தில் லாபம் சம்பாதித் தால் அதில் உங்களுக்கும் ஒரு பங்கு தருகின்றேன் என்று ரகசியமாக நினைத்துக் கொண்டார்.

ஆனால் பாபாவிற்குதான் ரகசியம் ஏதும் இல்லையே! நடந்தது, நடக்கப்போவது யாவும் அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாக இருந்தது. குழந்தை இனிப்பை விரும்புகிறது. ஆனால் தாய் அதற்கு கசப்பான மருந்தைப் புகட்டுகிறாள். இனிப்பு உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும், கசப்பு நன்மை தரும். குழந்தையின் நலம் கருதியே தாய் கசப்பான மருந்தை சமாதானம் செய்து புகட்டுகின்றாள்.

அன்பான தாயான பாபாவும் பக்தர்களின் நிகழ்கால, எதிர்கால நன்மைகளை அறிந்தவராதலால் தாமு அண்ணாவின் மனதில் இருப்பதை அறிந்து கொண்டு சட்டென்று, "பாபு அம்மாதிரியான உலக விவாகாரத்திலெல்லாம் நான் சிக்கிக் கொள்ள விரும்பவில்லை" என்றார்.

தன்னுடைய மனதிற்குள் நினைத்ததை அறிந்து கொண்ட பாபா அதற்கு விடை கொடுத் தனால் பாபாவின் விருப்ப மின்மையை அறிந்த தாமு அண்ணா அக்கணமே அந்த எண்ணத்தை கைவிட்டார்.

சிறிது நேரம் கழித்து அவர் தானியம், அரிசி, கோதுமை பலசரக்கு சாமான்கள் வியாபாரம் செய்யலாம் என்று நினைத்தார். பாபா அந்த எண்ணத்தையும் அறிந்து கொண்டு அண்ணாவை நோக்கி, ரூபாய்க்கு 5 சேர் என்று வாங்கி 7 சேர் என விற்பாய் எனக்கூறினார். எனவே அந்த வியாபாரமும் கைவிடப்பட்டது.

ஆனால் பாபா கூறியதற்கு எதிராக அடுத்த சில நாட்களில் தானியங்களின் விலை உயர்ந்தது. பாபாவின் தீர்க்கதரிசனம் பொய்யாகிவிடுமா என்ன? அடுத்த மாதமே கடுமையான மழை பெய்து திடீரென விலை படுமோசமாக இறங்கிவிட்டது. எனவே தானியத்தை சேர்த்து வைத்தவர்கள் எல்லாம் நஷ்டம் அடைந்தனர். மழையினால்

பருத்தி வியாபாரமும் மிகுந்த நஷ்டமடைந்தது என்று கூறத் தேவையில்லை.

பருத்தி, தானியம் ஆகிய இரண்டு வியாபாரங்களிலும் ஏற்பட்ட பயங்கர நஷ்டத்தில் இருந்து பாபா தன்னை காப் பாற்றியதைக் கண்ட தாமு அண்ணாவின் நம்பிக்கை மிகப் பலமடைந்து பாபாவின் உண்மை பக்தராக இன்று வரை இருந்து வருகிறார்.

ஒருமுறை 300 நல்ல மாம்பழங் களைக் கொண்ட ஒரு பார்சல் சீரடிக்கு வந்தது. அது கோவாவில் இருந்து ராலே என்ற மம்லத்தாரால் பாபாவுக்காக சாமாவின் பேரில் அனுப்பப்பட்டிருந்தது. பாபாவின் முன்னால் மாம்பழப்பெட்டி திறக்கப்பட்டது. எல்லா மாம்பழங் களும் நன்றாக இருந்தது. பாபா அவற்றில் இருந்து நான்கு மாம்பழங்களை மட்டும் எடுத்து தனது இருக்கையில் வைத்துக் கொண்டு மீதியை சாமாவிடம் ஒப்படைத்தார். இந்த நாலு பழங்களும் தாமு அண்ணாவிற்கு, அவைகள் அங்கேயே இருக்கட்டும் என்றார்.

தாமு அண்ணாவிற்கு இரண்டு மனைவிகள் இருந்தும் குழந்தைகள் இல்லை. பல சோதிடர்களை கலந்து கொண்டும், தானே சோதிடம் கற்று தனது சாதகத்தை ஆராய்ந்த பார்த்ததில் புத்திர ஸ்தானத்தில் பாப கிரகம் இருப்பதினால் குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லை என்பதை அறிந்து கொண்டார். ஆயினும் பாபாவிடம் அவருக்கு பெருத்த நம்பிக்கை உண்டு.

பாபாவிடம் மாழ்பழங்கள் வந்து சேர்ந்த இரண்டு மணிக்குப்பின் அண்ணா பாபாவிடம் வந்து, பாபாவின் கால்களைப் பிடித்து விட்டு சேவை செய்து கொண்டி ருந்தார். அப்போது அருகில் இருந்தவர்கள் பாபா தனியாகஎடுத்து வைத்திருக்கும் மாமபழங்களை கேட்டனர். அதற்கு பாபாவோ, அந்த நான்கு மாம்பழங்களும் தாமு அண்ணாவிற்கு மட்டும்தான். வேறு யாருக்கும் அல்ல. அது யாரைச்சேர வேண்டுமோ அவரே அதை உண்டு இறக்க வேண்டும். என்று கூறினார்

இவ்வார்த்தைகளைக்கேட்ட அண்ணா முதலில் அதிர்ச்சி யடைந்தார். அதைக்கண்டு அருகில் இருந்த மகல்சாபதி அண்ணாவிற்கு பாபாவின் வார்த்தைகளை விளக்கினார். பாபா கூறிய இறப்பு என்பது நம்மிடம் உள்ள அகங்காரத்தை இறக்கவைப்பது ஆகும். அது பாபாவின் திருவடிகளில் நிகழ்வது மிகப்பெரிய ஆசியாகும் என்று கூறினார்.

மனம் தெளிந்த அண்ணா பாபாவிடம் தான் மாம்பழங்களை சாப்பிட்டு இறக்க தயாராக இருப்ப தாகக் கூறினார். ஆனால் பாபா, அவரிடம் நீயே மொத்த மாம்பழங் களையும் தின்றுவிடாதே! உனது இளைய மனைவிக்கும் கொடு, இந்த மாம்பழங்கள் அற்புதம் செய்யும். உன் இளைய மனைவிக்கு நான்கு ஆண் குழந்தைகளும், நான்கு பெண் குழந்தைகளையும் கொடுக்கும் என்றார். காலப்போக்கில் பாபாவின் மொழிகளே உண்மையா

யின. சோதிடத்தின் கணிப்புகள் பொய்த்துப் போயின.

ஒரு முறை தாமு அண்ணா, பாபாவைச் சுற்றிலும் இவ்வளவு பேர்கள் கூடுகிறார்களே அவ்வளவு பேர்களும் அவரிடம் இருந்து பலன் பெறுகிறார்களா? என்று நினைத்த கணத்தில் பாபா தன் திருவாய் திறந்து அண்ணாவை நோக்கி, அங்கே பூத்திருக்கும் மரத்தினைப் பார். எல்லாப் பூக்களும் கனியாகுமா? எவை எல்லாம் இயற்கையின் சோதனைகளான காற்று, மழை, நோய் எல்லாவற்றையும் தாண்டி தாக்குப்பிடிக்கின்றதோ அவையே கனியாகும் என்றார்.

அண்ணா இரண்டாவது கேள்வியையும் மனதிற்குள் கேட்டார். பாபா நீங்கள் இறந்துவிட்டால் உங்களையே நம்பியிருக்கும் நான் நிலைகுலைந்து போய்விடுவேன். பிறகு நான் எங்கனம் வாழ்வேன் என்றார். அதற்கு பாபா உடனே நீ என்னை நினைக்கும் போதெல்லாம் நான் உன்னுடன் இருப்பேன். இது சத்தியம் என்றார்.

உண்மைதான் இந்த வாக்குறுதியை 1918 பாபாவின் மகா சமாதிக்குப் பின்னரும் காப்பாற்றிவருகின்றார் என்ற அண்ணா ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார். எனது முப்பது வருட நண்பன் எனது மனைவியின் வைர நகைப் பெட்டியை திருடிவிட்டான்.நான் பாபாவின் படத்திற்கு முன்னால் சென்று அழுதேன். மறுநாள் காலையில் பெட்டியுடன் வந்த நண்பன் தன்னை மன்னித்துவிடும்படி என் கால்களைப் பிடித்துக்கொண்டு வேண்டினான்

பாபாவின் கூற்றுக்கள் அவர் வாழ்ந்த போது மட்டுமல்ல, இன்றைய தேதிவரை அவரை பரிபூரணமாக நம்புவோர்கள் அவர்கள் வேண்டியதைவிட மிக அதிகமான பலனை அடைந்து வருகின்றார்கள் என்பதே உண்மை.

ஓ! சாயிதேவனே! நாங்கள் கேட்டதைத் தரும் கற்பகத்தருவே! இச்சம்சார வாழ்க்கையில் பிறப்பு, இறப்புகளால் நாங்கள் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறோம். இதிலிருந்து எங்களை விடுவித்தருளுங்கள் தேவனே! இவ்வுலக ஆசைகளைத் தேடி ஓடுவதில் இருந்து எங்களைத் தடுத்தருளி, எங்களுக்கு ஆத்மஞானத்தை பெற அருளுங்கள்.

புலன்கள் கண்டிபடி அலைந்து திரிவதை தடுக்காவிட்டால் தன்னை உணரும் வாய்பே கிடைக்காது அல்லவா? சாயிதேவா! உன்னைத் தவிர இவ்வுலகில் உள்ள எந்த உறவும் இறுதியில் எமக்கு உதவுவது கிடையாது. தாங்கள் மட்டுமே எங்களுக்கு முக்தியை நல்க முடியும்! எனவே எங்களது அகங்காரத்தை அழித்து எந்நேரமும் உங்களது நாமத்தை உச்சரிக்கச் செய்து எங்களை காப்பாற்றுங்கள் சாயி நாதா!

ஸ்ரீ சாயியைப் பணிவோம்! அனைவருக்கும் சாந்தி உண்டாகட்டும்.

தொடரும்

நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும்

பாதாம்பிசின்

பாதாம் பிசின், உடல் ஆரோக்கியத்திற்கு பல நன்மைகளை வழங்குகிறது. இது பாதாம் மரத்தின் பிசினிலிருந்து பெறப்படுகிறது மற்றும் பாரம்பரிய உணவு மற்றும் மருத்துவத்தில் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.



இது பொதுவாக பழுப்பு நிறத்தில் காணப்படுகிறது மற்றும் நீரில் ஊற வைக்கும்போது ஜெல் போன்ற அமைப்பைப் பெறுகிறது. தமிழ்நாட்டில், இது பானங்கள், இனிப்புகள் மற்றும் பாரம்பரிய உணவுகளில் பயன் படுத்தப்படுகிறது. பாதாம் பிசின் அதிக அளவு நார்ச்சத்து, ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் மற்றும் இயற்கை சர்க்கரைகளைக் கொண்டுள்ளது.இது கலோரிகளில் குறைவாக இருப்பதால், எடை குறைப்பதற்கு ஏற்றது. இது உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கவும், பல்வேறு உடல்நலப் பிரச்சனைகளைத் தீர்க்கவும் உதவுகின்றன.

பாதாம் பிசினில் உள்ள அதிக நார்ச்சத்து செரிமான மண்டலத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இது மலச்சிக்கலைத் தடுக்கவும், குடல் இயக்கத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. மேலும், இதன் ஜெல் போன்ற அமைப்பு குடல் சுவர்களை மென்மையாக்கி, செரிமானத்தை எளிதாக்குகிறது. செரிமான பிரச்சனைகளால் அவதிப்படுபவர்களுக்கு, பாதாம் பிசின் ஒரு இயற்கை தீர்வாக அமைகிறது.

பாதாம் பிசின் உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கும் தன்மை கொண்டது. இதை பால் அல்லது தண்ணீரில் ஊறவைத்து உட்கொள்ளும்போது, உடல் வெப்பநிலை சமநிலையில் இருக்க உதவுகிறது. கோடைகாலத்தில் இது ஒரு சிறந்த பானமாக பயன்படுத்தப்படுகிறது.

பாதாம் பிசின் குறைந்த கலோரி உணவாக இருப்பதால், இதன் நார்ச்சத்து பசியைக் கட்டுப்படுத்தி, நீண்ட நேரம் வயிறு நிரம்பிய உணர்வை அளிக்கிறது. இதனால், அதிக உணவு உட்கொள்வது குறைகிறது. இதய ஆரோக்கியத்திற்கு பயனளிக் கின்றன. இவை இரத்தத்தில்

உள்ள கொழுப்பின் அளவைக் குறைக்கவும், இரத்த நாளங்களை பாதுகாக்கவும் உதவுகின்றன.

மேலும், இதில் உள்ள மக்னீசியம் இரத்த அழுத்தத்தை சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது. பாதாம் பிசினில் உள்ள கால்சியம் மற்றும் மக்னீசியம் எலும்புகளை வலுப்படுத்தவும், தசைகளின் செயல்பாட்டை மேம்படுத்தவும் உதவுகிறது. குறிப்பாக, முதியவர்களுக்கு எலும்பு பிரட்சனை, தசைப்பிடிப்பு மற்றும் வலிகளை குறைக்கவும் இது உதவுகிறது.

இவை உடலில் உள்ள ஃப்ரீ ரேடிக்கல்களை எதிர்த்து, செல்களை பாதுகாக்கின்றன. இதனால், தொற்று நோய்களை எதிர்கொள்ள உடல் தயாராக இருக் கிறது.

பாதாம் பிசின் சருமத்திற்கு ஈரப்பதத்தை அளித்து, வறட்சியைத் தடுக்கிறது. முதுமையை தாமதப் படுத்தவும், சருமத்தில் உள்ள கரும்புள்ளிகளை குறைக்கவும் உதவுகின்றன.

பாதாம் பிசினை உணவில் சேர்ப்பது அல்லது முகமூடியாக பயன்படுத்துவது சருமத்திற்கு புத்துணர்ச்சியை அளிக்கும்.

பாதாம் பிசினில் உள்ள நார்ச்சத்து இரத்த சர்க்கரை அளவை சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது. இது கார்போஹைட்ரேட்டுகளின் உறிஞ்சுதலை மெதுவாக்கி, இரத்த சர்க்கரையில் திடீர் உயர்வைத் தடுக்கிறது.

இதைப் பயன்படுத்துவதற்கு முன், அதை சுத்தமான தண்ணீரில் 6–8 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். இதன் பிறகு, இது ஜெல் போன்ற அமைப்பைப் பெறும்.

பாதாம் பிசின் பொதுவாக பாதுகாப்பானது என்றாலும், சில முன்னெச்சரிக்கைகளை கடைபிடிக்க வேண்டும். அதிக அளவு உட்கொள்வது செரிமான பிரச்சனைகளை ஏற்படுத்தலாம். கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மருத்துவ நிலைகள் உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.



பாதாம் பிசின் ஒரு இயற்கையான, பல்நோக்கு உணவுப் பொருளாகும், இது செரிமானம், இதய ஆரோக்கியம், எடை மேலாண்மை, எலும்பு வலிமை, மற்றும் சரும ஆரோக்கியத்திற்கு பல நன்மைகளை வழங்குகிறது. உங்கள் ஆரோக்கியத்தை கவனித்து, பாதாம் பிசினை உங்கள் வாழ்க்கை முறையில் ஒரு பகுதியாக்கி, ஆரோக்கியமான வாழ்க்கையை அனுபவியுங்கள்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.01.26

ஆசை, கோபம், வெறுப்பு போன்ற தளைகளை களைந்து நெருப்பில் சுடுங்கள். உங்கள் இதய தோட்டத்தில் நற்சொற்கள், நற்செயல்களை எப்போதும் பொங்கச் செய்யுங்கள். அனைத்து உயிர்களிடத்தும் அன்பை நிரப்புங்கள். எல்லா நாட்களும் பொங்கல் திருநாளே!

02.01.26

இன்றிருப்பார் நாளையில்லை. நாளையிருப்பார் இன்றில்லை. நிலையென்று ஏதுமில்லை இவ்வுலகில்... இன்பமும் துன்பமும் இறுதிவரை ஒன்றுதான்.

03.01.26

உன் விருப்பம்போல் எதை வேண்டுமானாலும் செய். ஆனால் இறைவன் விருப்பம் எதுவோ அதை ஏற்றுக்கொள்.

04.01.26

திறந்த மனம் கொண்டிருப்பவனும், தன் தவறை தானே திருத்திக் கொள்பவனும் தான் இவ்வுலகில் முழு மனிதனாக வாழ்கின்றான்.

05.01.26

இறைவனுக்கு தன்னை அர்ப்பணித்த ஒருவனுக்கு தோல்வி என்றால் என்னவென்றே தெரியாது. எனவே காப்பாற்றுபவர் உங்கள் பக்கம் இருக்கும் போது நான் காப்பாற்றப்படுவேனா எனும் சந்தேகம் கொள்ளாதீர்கள்.

06.01.26

மக்கள் தியானம், பஜனை, சத்சங்கம், இராமாயணம், மகாபாரதம், பாகவதம், போன்ற புனித நூல்களை படித்தும் ஏன் அவர்களிடம் தெய்வீக சக்தி வெளிப்படவில்லை. காரணம். அவர்களுடைய மனம் உலகப் பொருட்களில் அழுந்திக் கிடப்பதால்தான்.

07.01.26

தனி மனித இயல்பு என்னும் குறுகிய மனப்பான்மையில் இருந்து விலகுங்கள். உங்களது உடலை எப்போதும் ஆதாரமாகக்

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

கருதாதீர்கள். அது வெறும் கருவி மட்டுமே. உங்களது பார்வை விசாலமாகட்டும். எண்ணம், சொல்,செயல் மூன்றும் ஒன்றையே குறிக்கட்டும்.

08.01.26

எங்கும் நிறைந்த ஆன்மீக உடல் நம்மிடம் உள்ளது. ஆனால் அதை பார்க்க நம்மிடம் ஞானக் கண்கள் இல்லை. கண் பார்வை இல்லாதவர்கள் எப்படி தன் உடலை காண முடிவதில்லையோ, அதுபோன்றே, ஞானக் கண் இல்லாதவர்கள் தன் ஆன்மீக உடலை காண முடிவதில்லை.

09.01.26

இவ்வுலகில் உள்ள அனைத்துப் பொருட்களும், இறைவனுக்குச் சொந்தமானவை. எல்லாவற்றையும் அனுபவித்துக்கொள்ளுங்கள். ஆனால் எதன் மீதும் பற்று வைக்காதீர்கள். வரும் போது நாம் ஒன்றும் கொண்டு வரவில்லை. செல்லும் போது யாரிடமும் விலாசம் கொடுக்கப் போவதும் இல்லை. பிறகு எதற்கு வீண் கவலை.

10.01.26

சுயகட்டுபாடுதான் வலிமை! சரியான எண்ணம் தான் சர்வாதிக்கம்! சாந்தம் தான் வல்லமை!

11.01.26

என் தந்தை என்னை விண்ணில் இருந்து மண்ணிற்கு இறக்கினார். ஆனால் என் குருவோ என்னை மண்ணில் இருந்து விண்ணிற்கு ஏற்றினார்.

12.01.26

தன்னால்தான் எல்லாம் நடக்கின்றது என்பவன் மனதை அறியாதவன். "தன்னாலே" எல்லாம் நடக்கின்றது என்று அறிபவன் மனதை அறிந்தவன்.

13.01.26

சேற்றில் இறங்காது தாமரையை பறிக்க இயலாது. தன்னை அறியாமல் இறைவனை உணர முடியாது.

14.01.26

தீக்குச்சியை ரசாயன கலவையில் உரசினால் தீபிழம்பு வெளிவரும். தண்ணீரில் உரசினால் தீபிழம்பு வெளி வருமா? அதே போல் உன் அறிவை இப்பிரபஞ்சத்தில் நிறைந்திருக்கும் பிரமத்தின் மீது உரசினால் உனக்குள் மறைந்திருக்கும் தெய்வீகம் வெளிப்படும். வேறு எதன் மீதாவது உரசினால்?

15.01.26

உங்களிடம் உள்ள எந்த குணம் உங்களை தாழ்த்துகிறது, எந்த குணம் உங்களை உயர்த்துகின்றது என்பதை பிரித்து அறிவதே ஆன்மீக அறிவு ஆகும்.

16.01.26

இவ்வுலகில் நீங்கள் விரும்பிய அனைத்தும் கிடைக்கின்றன என்பதற்காக அவற்றை மனம் போன போக்கில் பயன் படுத்தக்கூடாது. ஏனெனில் அவற்றுக்குண்டான விளைவுகளையும் சேர்த்தே நீங்கள் பயன் படுத்துகின்றீர்கள். அதை அனுபவிக்க தயாராக இருந்தால் உங்கள் விருப்பம் போல் செயல்படுங்கள்.

17.01.26

கோபம், பொறாமை, பேராசை, இவையாவும் மனம் எனும் பானையில் ஏற்படும் துவாரங்கள். இதன் வழியாக, சாந்தி, ஆரோக்கியம், மகிழ்ச்சி எனும் நீர் வெளியேறி பானை காலியாகலாம். ஆகவே அதனை சரி செய்து துவாரங்களை

மூடிவிட்டால் மனம் எனும் பானை பயனுள்ளதாய் அமையும்.

18.01.26

யார் எல்லா உயிரினங்களையும் ஆன்மாவிலும், ஆன்மாவை எல்லா உயிரினங்களிலும் காண்கின்றானோ அவன் யாரையும் வெறுப்பதில்லை.

19.01.26

தன்னிடம் உள்ள குறைகளை காண்பவன் முழு மனிதன்.பிறரிடம் உள்ள குறைகளைக் காண்பவன் குறை மனிதன்.

20.01.26

அறிவுக்கு நிகரான தெய்வமில்லை. அறிவை உணராது தெய்வமில்லை.

21.01.26

எவரிடம் ஆசை அதிகம் இருக்கின்றதோ அவர்கள் கடைசிவரை ஏழையாகவே இறப்பார்கள்.

22.01.26

எவன் கடவுளை நேசிக்கின்றானோ அவனுக்கு பயம் இருக்காது. எவனிடம் பயம் இருக்கின்றதோ அவனால் கடவுளை நேசிக்க முடியாது.

23.01.26

எதை நீங்கள் கவுரவம் என்று நினைக்கின்றீர்களோ அதில் இருந்து ஒரு படி கீழே இறங்கி வருவதுதான் வாழ்க்கை.

24.01.26

உன்னை நீ அறிந்து கொள்ள வேண்டும் என்றால், மௌனத்தைத் தவிர வேறு வழி இல்லை.

25.01.26

உங்களது பேச்சு உலகின் எல்லைவரை செல்லலாம். ஆனால் உங்களது மௌனம் பிரபஞ்சத்தின் எல்லையை தாண்டும்.

26.01.26

போதி மரத்தில் மட்டுமல்ல, வேறு எந்த மரத்தின் அடியில் அமர்ந்திருந்தாலும் புத்தன் ஞானம் பெற்றிருப்பான் காரணம் மௌனம்.

27.01.26

இந்த உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பது உலகத்தின் கைகளில் உள்ளது. இப்படித்தான் வாழ வேண்டும் என்பது நமது கைகளில் உள்ளது.

28.01.26

தியானிப்பதற்கு முன்பு உனது மனதை குருவிடம் ஒப்படைத்துவிடு இல்லை என்றால் உனது மனமே உனக்கு குருவாகி உன்னை தவறாக வழிநடத்தும்.

29.01.26

அனுபவம் என்பது முடிவல்ல. அது உங்கள் மனதின் அவசரபுத்தி. நீங்கள் எதை அனுபவம் என்கின்றீர்களோ அதைக்கடந்து செல்வதே அனுபவம்.

30.01.26

ஆன்மீகம் என்பது தனிமைப் பயணம் தான். ஆயினும் அதை குருவுடன்தான் சென்றாக வேண்டும். குரு அறிவுக்காக தேவைப் படுவார் என்பதைத் தாண்டி பாதுகாப்பிற்காக தேவைப் படுவார் என்பதே உண்மை.

31.01.26

ஆன்மீகம் என்பது தத்துவம் அல்ல! அது உணர்தல் குருவின்றி உணர்தல் என்பது எவ்வுலகிலும் சாத்தியமல்ல!

●

சூட்சுமவாதி



சூட்சுமம் நிறைந்த இவ்வுலகம் சூட்சுமத்திற்குள்தான் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும் அவ்வாறான இயக்கத்தை ஆதியில் எவன் கண்டு உணர்ந்தானோ அவனே சூட்சுமவாதியாக பிரதி பலித்தான். அவ்வாறாக தவத்தின் மூலம் கிடைக்கும் பேராற்றலை வழி வழியாக கடத்தி வரும் போது அவரே குருவாகவும், கடவுளாகவும் காட்சியளித்தார்கள். இம்மாதிரியான தவத்தை நவீன காலத்திற்க்கேற்றார் போல் பாடத்திட்டமாக வடிவமைத்து கற்றுத் தரும் மாஸ்டர்கள் பல்கி பெருகி விட்டதால் வழி வழியாக வந்த குருமார்களை கண்டுணர்வதில் சிக்கல் ஏற்படுகிறது.

அச்சிக்கலை தவிர்த்து பார்த்தால் இக்காலத்தில் நமக்கு கிடைத்த கிடைத்தற்கரிய பொக்கிஷமாக 'பகவான் சாய்நாதர்' கண்காணிப்பில் பல்வேறு மகான்களால் வளர்த் தெடுக்கப்பட்ட 'நம்குரு யோகி ஸ்ரீராம் பாபா' அவர்களே இன்று இவ்வுலகிற்கு 'நியதகுரு' வாக காட்சியளிக்கிறார் . அவரை அணுகும் ஒவ்வொருவரும் அவரின் சூச்சுமத்தை புரிந்துக் கொள்கின்றனர். மேலும் தியானத்தின் போது குருவின் உள்ளங்கை வழியாக பிரபஞ்ச பேராற்றலை சீடனின் உச்சந்தலை யில் செலுத்தி உடல் முழுவதும் பாயச் செய்யும் போது அவரின் சூட்சுமத்தை உணர்ந்து அனுபவிக்கும் வாய்ப்பையும் பெறுகின்றனர் .

இவ்வாறு குருவின் சூட்சு மத்தை உணர்ந்த நாம் அவர் ஓர் சூட்சுமவாதியாக நிகழ்த்திய நிகழ்வை இங்கே பதிவிட விரும்பு கிறேன். கடந்த 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதியில் ஆவோ சாய் சேவா டிரஸ்ட்

சொ. அகஸ்டின்

நடத்திய விருது வழங்கும் விழாவிற்கு இரண்டு நாள் பயணமாக கோவை மாநகர் இடையார் பாளையத்தில் அமைந்துள்ள "ஸ்ரீ சீரடி சாய் குருவருள்" திருக்கோயிலுக்கு 24 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் குருவுடன் சென்றடைந்தேன். அக்கோயில் வளாகத்தில் மண்டபம் அமைந்துள்ளதால் நிகழ்ச்சி ஏற்ப்பாட்டாளர்களும் டிரஸ்ட் உறுப்பினர்களும் பரபரப்பாக காணப்பட்டனர். நம் குருவின் வருகையை அறிந்து சிறப்பான வரவேற்பு அளித்து இரவு தங்குவதற்க்கான தனி அறையையும் ஒதுக்கி கொடுத்தனர். வந்த களைப்பு தீர அறைக்கு சென்று சற்று ஓய்வெடுத்துக்கொண்டு 5.00 மணிக்கு கோயில் வளாகத்திற்கு வந்தோம் .

குருவிற்க்காக திரு. சரவணன் என்பவர் காத்துக்கொண்டு இருந்தார் குருவை கண்டதும் நமஸ்காரம் செய்து ஆசி பெற்றார். பின்பு குருவிடம், அவர் மனதில் நீண்ட நாட்களாக தேக்கி வைத் திருந்த அன்னை ராதாகிருஷ்ண மாயி பற்றி தனி புத்தகம் வெளி யிடவேண்டும் என்ற ஆசையை அருவிபோல்கொட்ட ஆரம்பித்தார் . அமைதியாக கேட்டுக் கொண்டி ருந்த நம்குரு அவரின் ஆர்வத்தையும் பக்தியை யும் கண்டு இப்பணி உன்னால் தான் நடக்கும் அதுவும் மிக விரை வில் நடக்கும். அடுத்த ஆண்டு இறுதிக்குள் இப்பணி முடிந்து புத்தக வெளியீட்டில் நான் கலந்து கொள்வேன் எக்கவலையும் வேண்டாம் என கூறி அருளாசி வழங்கினார்.

அதற்கு முன் இப்பணியை மூன்று பேர் செய்வதாக உள்ளனர் அதில் நானும் ஒருவன் உமக்காக விட்டு கொடுக்கிறேன் நீங்கள் வேறு எவருக்காவது விட்டு கொடுத்தால் நானே எழுத நேரிடும் பார்த்துக்கொள்ளுங்கள் என்றும் கூறினார் மேலும் இப்புத்தகத்திற்காக பல்வேறு தகவல்களை சேகரித்து வைத்துள்ளேன் ஏதேனும் சந்தேகம் ஏற்படுமாயின் தயக்கம் வேண்டாம் எந்நேரத்திலும் அழைக்கலாம் என கூறி வாழ்த்து சொல்லியும் விடை பெற்றார் நம் குரு. இருப்பினும் இப்பணியை எவ்வாறு முடிக்க போகிறேன் என்ற அச்சம் அவர் முகத்தில் நிலவியதை குரு அறிந்திருந்தார் .

ஆன்மீகத்தை பற்றி பேசும்போது மூன்று மணி நேரம் எப்படி சென்று என்றே தெரியவில்லை பகல் கழிந்து இரவு கூடியதை கண்ட பின்பு தான் தெரிந்தது மணி 8.00 ஆகிவிட்டது. அதன் பின் இரவு உணவு அருந்திவிட்டு தங்கும் அறைக்கு சென்றோம். மறுநாள் காலை நிகழ்ச்சி தொடங்கி மதியம் முடிக்கப்பட்டதால் அங்கிருந்து அருகில் இருக்கும் சில இடங்களை சுற்றிபார்த்துவிட்டு அன்று மாலை சென்னைக்கு புறப்பட ஆயத்தமானோம்.

அந்நேரத்தில் எங்களை இடைமறித்த சரவணன் அவர்கள், நம் குருவை பார்த்து நேற்று நீங்கள் பேசிவிட்டு புறப்பட்ட பின் என்னால் இப்புத்தகத்தை அச்சமின்றி எழுத முடியுமா? ஏதாவது தடங்கல் வருமா ? இதற்கு முன் இம்மாதிரியான புத்தகத்தை எழுதின அனுபவம் இல்லை இது சரியாக வருமா? என்று பல்வேறு

குழப்ப நிலையில் இருக்கும் போது நேற்றிரவு மீண்டும் என்னை சந்தித்து ஒரு அடி உள்ள ஒரு பிரம்பை என்னிடம் கொடுத்து இப்பணி முடியும் வரை உமக்கு உறுதுணையாக இருக்கும் என்று கூறி புறப்பட்டீர்கள்.

அதன் பிறகு எனக்குள் ஏதோ ஓர் உத்வேகம் பிறந்தது போல் இருந்தது என்றார். எப்போதும் போல் நம்குரு மௌனமாக சைகை யிலேயே புறப்படுகிறோம் என்பதை சொல்லி புறப்பட்டார் . இந்நிகழ்வு சரவணனுக்கு ஆச்சர்யமில்லை அது தன்னுடைய மன தைரியத் திற்காக மீண்டும் தன்னை சந்தித்து கொடுக்கப்பட்ட பிரம்பாக நினைத்து கூறியிருக்கலாம்.

ஆனால் எனக்கு தான் தாங்க முடியாத ஆச்சர்யம் ஏனென்றால் அன்றிரவு முழுவதும் குரு அவர்கள் எங்களுக்காக ஒதுக்கப்பட்ட தனியறையில் எங்களுடன் பேசிக் கொண்டிருந்தார். குரு அவர்கள் ஏற்கனவே எங்களிடம் இராதா கிருஷ்ணமாயி பற்றிய தகவல் களைக்கூறி அவரைப்பற்றி நமது புத்தகத்தில் தொடராக எழுதப் போகின்றேன் என்று கூறியிருந் தார்கள். அதை நான் சுட்டிக்காட்டி நீங்கள் ஏன் இந்த புத்தகத்தை சரவ ணன் எழுதட்டும் என்று விட்டுக் கொடுத்தீர்கள் என்று கேட்டேன்.

குரு அவர்கள் அன்று இரவு முழுவதும் சரவணன் மற்றும் இராதாகிருஷ்ணமாயி பற்றிய பல்வேறு தகவல்களையும், சரவணன் மற்றும் இராதாகிருஷ்ண மாயி இருவருக்கும் உள்ள முன் ஜென்ம தொடர்பை பற்றியும் கூறி அதனால் அவர் தான் இந்த புத்தகத்தை எழுத வேண்டும் என்றும் கூறினார்.

இவ்வாறு இரவு முழுவதும் பேசிக் கொண்டே இருந்தோம். அப்படி இருக்கையில் சரவணனை சந்தித்து எப்படி அவருக்கு பிரம்பை கொடுத்திருக்க முடியும்? ஒரே நேரத்தில் எப்படி இரண்டு இடத்தில் இருந்திருக்க முடியும் என்பதில் தான் என்னுடைய ஆச்சர்யம்! இந்நிகழ்வை யாரிடமும் இதுவரை நான் பகிர்ந்தது இல்லை இக்கட்டுரை மூலமாக தான் வெளிப்படுத்துகிறேன்.

இதை உறுதி படுத்தும் விதமாக கடந்த மூன்று ஆண்டுகளுக்கு (2023) முன் கூத்தனூரில் நான் சரவணனை சந்திக்கும் போதும் குரு கொடுத்த பிரம்பை பத்திரமாக வைத்துள்ளேன் என்ற தகவலையும் என்னிடம் கூறினார். அது சாதாரண பிரம்பு என்றால் பத்திரபடுத்த வேண்டிய அவசியமில்லை என்ற கேள்வியும் எனக்குள்ளே எழுந்தது. இறை பணி என்பதால் இறைவன் தான் வரவேண்டும் என்ப தில்லை 'நியதகுருவான யோகி ஸ்ரீராம் பாபா' அவர்களே இறைவ னாக வருவார் என்பதை நான் நேரில் கண்ட காட்சியின் மூலம் உணர்ந்தேன். ஆகவே அன்பர் களே! சூட்சுமத்தோடு தொடர் பில்லாமல் சூட்சுமம் நடத்த இயலாது! சூட்சுமவாதியோடு பயணிக் கிறோம் என்பதை உணராமல் சூட்சுமத்தை அறிய இயலாது.

நமது குருவுடன் ஷீரடி செல்லும் போது குரு பாபாவாகவே காட்சி தந்ததை அடுத்த பதிவில் பகிர்கிறேன்.

குரு வாழ்க! குருவே துணை!

வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம்

11



ஹேமலேகை கூறிய கதை யினை பகவான் ஸ்ரீரமண மகரிஷி பின்வரும் பாடலில் அறிவின் முக்கியத்துவத்தையும், ஞானத்தின் பெருமையையும் மிகஅழகாக விளக்குகின்றார்.

அறிவொன்றே நேர்முக்தி சாதனமாகும்
பிறசா தனங்களின் பேரு, மருவின்றி
யாகாது முக்தியுற லக்கினியின் றிப்பாக
மாகாத வாறென் றறி.

எளிய கருத்து: சாதனங் களில்லெல்லாம் ஆத்மஞானமாகிய அறிவே மோட்சத்திற்கான ஒரே சாதனமாகும். சமையலுக்கு எப்படி நெருப்பில்லாமல் பிரயோஜனமில்லையோ, அது போல ஆத்மஞானம் இல்லாமல் மோட்சமானது கிட்டாது.

மோட்சம் பெற ஆத்ம ஞானமானது மிகவும் அவசிய மாகிறது. கர்மம், பக்தி, யக்ஞம் செய்தல், தானம் அளித்தல், ஆன்மீக நூல்களை படித்தல் இவையெல்லாம் நம் மனதினை தூய்மைப்படுத்தி மாசுக்களை நீக்கும். ஆனால், மோட்சத்தை நல்கா, அதனை நெறிப்படுத்தி

மோட்சத்தை நல்குவது ஆத்மஞானமேயாகும்.

எளிய உதாரணமாக, சமையலுக்கு காய்கறி, பருப்பு, அரிசி, உப்பு, மிளகாய் என பல்வேறு பொருட்கள் இருந்த போதிலும் அதனை பக்குவப்படுத்தி உயிர்வாழ உணவாய் நல்குவது நெருப்பேயாகும். இங்கு நெருப்புபோல் ஞானமே நம்மை பக்குவப்படுத்தி மரண மில்லா பெருவாழ்வு நல்கும். மரணமில்லா பெருவாழ்வு எனப்படுவது நிலையான, அமைதியான, சஞ்சலமற்ற, பயமில்லா, மகிழ்ச்சியான மௌனத்தையே குறிக்கும்.

ஆத்மஞானம் பெறுவதற்கு உதவிபுரியும் இன்றியமையாத சாதனங்களை நான்குவகையாகப் பிரிக்கலாம். 1. பரம்பரா சாதனம், 2. பகிரங்க சாதனம், 3. அந்தரங்க சாதனம், 4. சாக்ஷாத் சாதனம்.

யக்ஞம், தானம், அர்ச்சா அபிஷேகம் போன்றவை பரம்பரா சாதனத்தில் அடங்குபவை. விவேகம், வைராக்கியம், அஷ்டாங்கயோகம் போன்றவை பகிரங்க சாதனத்தில் அடங்குபவை. சிரவணம், மனனம், நிதித்யாஸனம் (ஒருவகை ஆழ்நிலை தியானம்) போன்றவை அந்தரங்க சாதனையில் அடங்குபவை. சாக்ஷாத் சாதனம்.

ஆனால் நேரடி சாதனம் என்பது ஆத்மஞானம் ஆகும். நமது நிஜசொரூபத்தை பற்றி உணர்தலே (தன்னை உணர்தல்) ஆத்மஞானமாகும். இதுதான், மேற்கூறிய அனைத்திலும் மோட்சத்தை அடைவதற்கான



நாராயணன்

நேரடியான சாதனமாகும். ஏனையவையாவும், ஆன்மீக முன்னேற்றத்திற்குத் துணை புரிபவை. ஆனால், அவை நேரடி சாதனமாகாது.

மனது பக்குவமடைந் தால் புலன்கள் கட்டுப் பாட்டில் இயங்கும். புலன்கள் கட்டுப்பாட்டில் இயங்கினால் உணர்வுகள் கட்டுப்பாட்டில் இருக்கும். உணர்வுகள் கட்டுப்பாட்டில் இருக்கும் மனிதனுக்கு தவமும், மௌனமும் கைவசப்படும். அவன் எப்பொழுதும் புன்சிரிப்புடன் சாந்தமாக இருப்பான். எத்தகைய சிக்கல்களையும் பக்குவமாக, பரபரப்பில்லாமல் நிதானமாக கையாண்டு வெற்றிபெறும் திறன் பெற்றிருப்பான். உணர்வுகளை கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் ஒருவனுக்கு தீமைகள் அண்டாது. நல்ல ஆயுள் விருத்தியும், ஆரோக்கியமும் நிரம்பப்பெற்ற வனாக இருப்பான்.

இவ்வாறு, ஹேமலேகை கூறிய வார்த்தைகளைக்கேட்ட ஹேமசூடன், "பிரியமானவளே, இளம்பெண்ணாகிய நீ பேசும் ஞானவார்த்தைகள் எனக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்துகின்றது. வயதிலும், அனுபவத்திலும் முதிராதவளான உன் வார்த்தைகளை எப்படி நம்புவது? பிரமாணம் ஏது? உன்னுடைய வார்த்தைகளானது ஆகாயத்தின் மேகக்கூட்டத்தின் நடுவிலே தோன்றும் சித்திரம்போன்று ஆதாரமற்ற வைகளாக எனக்குத் தோன்று

கின்றது" என்று கூறினான்.

இராஜகுமாரரே! தவசீலர்கள் சொல்லிய வார்த்தைகள் எப்படிப் பொய்யாகும்? நான் சொன்ன வையனைத்தும் தவசீலர்களின் உண்மை மொழிகள், அது எப்படி அபத்தமாகும்? சத்ய சீலர்களான தவசிகள் பொய்யுரைக்க மாட்டார்கள், எவனொருவன் ஆத்மஞான விஷயத்தில் பொய் யுரைத்து அநாத்ம சங்கதிகளை கூறுகின்றானோ, அவன் மேலோகத்திலும், வாழும் இந்த உலகத்திலும் நன்மையை அடைவதில்லை என்பது சத்தியம்.

ஒருவன் கண்நோய்க்கு மருந்தை அறிவதானால் மட்டும் அவனது நோயானது குணமடைவதில்லை. மருந்தை கூறிய மருத்துவனை நம்பி அதனை கண்ணில் தடவ மட்டுமே, நோயானது படிப்படியாக குறைந்து குணமாகும். இவ்வுதாரணத்தை ஒத்து, நம்பிக்கைக்குரியவர்களின் வார்த்தையை நம்பி அதனை ஏற்கவேண்டும்.

உங்களிடம் பொய்க்கூறுவ தினால் எனக்கென இலாபம்? ஒருவன் நம்பிக்கை என்ற தாயைப் பணிவதினால் மட்டுமே எல்லாவித சந்தேகத்திலிருந்து விடுபடமுடியும். தன் தாயிடம் விசுவாசமில்லாத குழந்தை எப்படி உலகில் ஜீவித் திருக்கமுடியும்? அதுபோல, மனைவியிடம் நம்பிக்கையில்லாத மனிதன் எப்படி சுகத்தை அனுப விக்கமுடியும்? நம்பிக்கை யில்லாத எந்தவொரு செயலும் சரியானவகையில் நடைபெறாது என்றாள், ஹேமலேகை.



அன்பிற்குரியவளே! நீ சொல்வதைப்போல நம்பிக்கையை வளர்க்கவேண்டுமென்றால் அது சத்துக்களான சாதுக்களிடம் வைக்க வேண்டும். அசத்துக்களான மூடர்களிடமும், பெண்களிடமும் எப்படி வைப்பது? இவர்களிடம் வைக்கும் நம்பிக்கையானது தூண்டிலின் வெளிப்புற அழகைக் கண்டு மயங்கி முள்ளில் சிக்கிக்கொள்ளும் மீன்களின் நிலைபோல அதோகதிதான் ஏற்படும், அவர்களின் நம்பகத் தன்மையினை உறுதிசெய்து கொள்ள வேண்டாமா? என்றான் ஹேமசூடன்.

இவ்வார்த்தைகளை கேட்ட ஹேமலேகை, உண்மையான சத்துக்களை அடையாளம் கண்டு, அவர்களிடம் சங்கமம் வைத்தல், விசாரம் மேற்கொள்ளல், இவையாவும் மற்றவர்கள் கூறுவதை வைத்தோ அல்லது சாஸ்திரங்களில்

கூறப்பட்ட பிரமாணங்களை வைத்தோ ஏற்பட்டது என்றால், அதில் எது சத்து, எது அசத்து என்று எப்படி நம்புவது? இது முடிவில்லாத வாதத்திலேயே முடியும். ஒருவித தீர்மானமும் ஏற்படாது.

ஒருவனுக்கு திடமான நம்பிக்கை இல்லாதபொழுது, அவன் தவசீலர்களும், சாஸ்திரங்கள் சொல்லும் பிராமணத்திலும் மட்டும்எப்படி அவனுக்கு நம்பிக்கை ஏற்படும். அதிலும் அவனுக்கு சந்தேகங்கள் மட்டுமே, எழுமே தவிர நம்பிக்கை உண்டாகாது. இராஜகுமாரரே! வீண்விவாதம் செய்பவர்களுக்கு ஒருகாலத்திலும் மேன்மையென்பது ஏற்படாது. ஒன்றை நன்றாக நினைவு கொள்ளுங்கள், இந்த உலகம் முழுவதுமே நம்பிக்கை என்னும் சக்கரத்தில் தான் ஓடுகிறது. நாளை நாம் கண் விழிப்போம் என்ற நம்பிக்கையே நமது வேலைகளை சரிவர இன்று செய்யவைக்கின்றது அல்லவா?

அரசே! நம்பிக்கை என்பது துடுப்பு, வாழ்க்கை என்ற படகில் பயணம் செய்ய, சரியான திசையில் படகை திருப்ப நம்பிக்கை என்ற துடுப்பு மிக முக்கியமாகும். முற்காலத்தில், கோதாவரி நதி தீரத்தில் சகியமலை என்ற இடத்தில் குருகுலம் ஒன்று இருந்தது. அங்கே கௌசிகர் என்ற மாமுனிவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அந்த குருகுலத்தில் அநேக சிஷ்யர்கள் இருந்தனர். அவர்கள் ஒருநாள், குருநாதர் இல்லாத சமயத்தில் தங்களுக்குள் உலகநிலைதனை தத்தம் அறிவுக்கு எட்டியவாறு விவாதம் செய்தனர்.

அவர்களில் வீண்விவாதத்திலும், குறுக்குப்புத்தியிலும் பெயர்பெற்ற சுங்கன் என்ற சிஷ்யன் இருந்தான். அவனுக்கு அனுபவ அறிவு ஏதுமற்ற போதும், வறட்டு வாதத்தினால் சகசிஷ்யர்களின் கருத்துக்கு மாறாகவே தன் எண்ணங்களை பதிவுசெய்தான். சாஸ்திரங்கள் கூறும் பிரமாணங்கள் யாவும் பொய்யானவையே என்று கூறினான். அதற்கு உதாரணமாக சாஸ்திரங்களில் நியாயப்படுத்தி ஒன்றை சொல்லி அதையே வேறிடத்தில் மற்றொரு பிரமாணத்தை கொண்டு மறுப்பதை சுட்டிக்காட்டி, இப்படியிருப்பதினால் அறிவின் உண்மைத்தன்மையை அறிய முடியாது என்று கூறி சாஸ்திரங்களே பொய்யென்றுரைத்தான்.

இப்படி நாம் தீரவிசாரித்தே சென்றோமானால் இறுதியில் மிஞ்சுவது சூன்யம் மட்டுமே, இதனால் சூன்யம் மட்டுமே உண்மைத்தன்மை கொண்டுள்ளது என்றான் சுங்கன் என்ற சிஷ்யன். இவனின் இந்த வாதத்தினை அனுசரித்த சில மூடசிஷ்யர்கள் சூன்யமே எல்லாம் என்று நம்பி நாசமாயினர். அறிவுள்ள சிஷ்யர்கள் குருவின் வருகைக்காக காத்திருந்து அவரிடமிருந்து உண்மைப்பொருளை, அறிவின் உண்மைநிலையினை உணர்ந்து நற்கதியடைந்தனர். ஆகவே, முடிவில்லாத வீண்பிடிவாதத்தை விட்டு சாஸ்திரங்களை பகுத்தறிவின் மூலமாக விசாரம் செய்து தெளிவடையவேண்டும். இது தெளிந்த ஞானத்தால் மட்டுமே நிகழும் என்றாள் ஹேமலேகை.

அமைதியாக கவனத்துடன் கேட்ட ஹேமசூடன், "பிரிய மானவளே! உன்னிடம் இவ்வளவு அறிவின் தெளிவுயிருப்பதை நான் உணரவில்லை. நான் மிகவும் தன்யனானேன். நம்பிக்கையினால் சகல நலனும் சித்தியாகும் என்றாய், நீ கூறிய கதையில் வந்ததைபோன்று ஒன்றுக் கொன்று முரணான ஆகமசாஸ்திரங்கள் உள்ளனவே! இதில் எதனிடத்தில் நம்பிக்கை வைக்கலாம்? எதனிடத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது?

ஆச்சார்யர்களின் கருத்துக்கள், மதங்களின் கோட்பாடுகள், மாறுபட்ட சிந்தனைகள், சாஸ்திரத்திற்கு உரையெழுதியவர்களின் எதிர்மறை கருத்துக்கள், இதனில் எது எடுத்துக் கொள்ளத்தக்கது? எது தள்ளத் தக்கது? என்று எனக்கு கூறுவாயாக. மேலும் அபிமானம் உள்ளயிடத்தில் – அதை நல்லதென்றும், இல்லதயிடத்தில் குற்றமுடையது என்றும் சொல்லுவோரே இவ்வுலகத்தில் அதிகம். அவர்கள் சூன்யவாதிகளுக்கே ஆதரவாகவும், அதற்கு அனுகூலமான ஆகமங்களும் இருக்கத்தானே செய்கின்றது?" என்றான் ஹேமசூடன்.

இந்த சந்தேகமில்லா நம்பிக்கையையே ஞானத்தின் தெளிவு என்று ஸ்ரீரமண மகரிஷி அவர்கள், பின்வரும் பாடல்வரிகளின் மூலம் மிகஅழகாக விளக்குகின்றார். அதை அடுத்த மாதம் விரிவாகப் பார்க்கலாம்.

தொடரும்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.








16.01.26 சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தின் 15 வது சீரடி புனித யாத்திரை. யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.






நாசிக் கோதாவரி உற்பத்தி ஸ்தானம்


நாசிக் திரைகம்பேஸ்வரர்


பஞ்சவடி திரிவேணி சங்கமம்


நாசிக் காலாராம் ஆலயம்


ரஹதா குஷால்சந்த் வீடு

15.02.26 அன்று நடைபெற்ற ஸ்ரீ லக்ஷ்மி ஹயகிரீவர் ஹோம நிகழ்வுகள்.


















தபோவனம் ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள்

ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளின் பூர்வாசிரமம் பற்றிய செய்திகள் எதுவும் அதிகம் கிட்டவில்லை. அவர் கர்னாடகாவில் உள்ள மங்களபுரி என்ற ஊரில் வெங்கோபா கணபதி, சக்குபாய் ஆகிய தம்பதிக்கு மகனாகப் பிறந்தார் என்றும், அவரது இயற்பெயர் சுப்பிரமணியன் என்றும் செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவர் தம் ஏழு வயதில் தம் தந்தையிடமிருந்து காயத்ரி மந்திர உபதேசம் பெற்றதாகவும் கூறுகிறார்கள்.

இயற்கையிலேயே ஆன்மிக நாட்டத்துடன் திகழ்ந்த சுப்பிரமணியனுக்குச் சராசரிப் பள்ளிக் கல்வியில் அதிக ஈடுபாடு ஏற்படவில்லை என்பது புரிந்துகொள்ளக் கூடியதுதான். அவருக்குப் பன்னிரண்டு வயதாக இருந்தபோது, அடிக்கடி அவர்முன் ஒரு ஜோதி தோன்றி அவரை வழி நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. இளம் வயதிலேயே அந்த ஜோதி காட்டும் வழியைப் பின்பற்றி அவர் வீட்டைத் துறந்து வெளியேறிவிட்டார். எல்லா உறவுகளையும் துறந்த அவர், தேசாந்திரியாகப் பற்பல இடங்களுக்குச் சென்றார்.



பாரத தேசமெங்கும் பல திருத்தலங்களில் உறைந்துள்ள தெய்வசக்தியை பக்தியோடு வழிபட்டார். அவ்வகையில் பண்டரி புரத்திற்குச் சென்று பாண்டுரங்கனையும் தரிசித்தார். ஏராளமான பக்தர்கள் எந்தப் பண்டரிநாதன் அருளில் திளைத்தார்களோ அதே பண்டரிநாதன் அருளில் இவரும் மூழ்கித் திளைத்தார்.

பின்னர் ஜோதிர்மடத்தின்

யோகி ஸ்ரீராம் பாபா

பீடாதிபதியான சிவரத்னகிரி சுவாமிகளை நேரில் சந்தித்து அவரால் ஈர்க்கப்பட்டார். ஜோதிர்மடம் என்பது ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட மடங்களில் ஒன்று. இந்த மடம் ஆதிசங்கரரின் நான்கு முக்கிய சீடர்களில் ஒருவரான தோடகாச்சாரியார் பரம்பரையில் வரும் மடமாகும். இவரது அளவற்ற ஆன்மிக நாட்டத்தைக் கண்டு வியந்த சிவரத்னகிரி சுவாமிகள் இவரைத் தன் சீடராக ஏற்றுக்கொண்டார்.

அவரே இவரைத் துறவியாக்கி ஞானானந்தகிரி என்ற தீட்சா நாமத்தை இவருக்கு வழங்கினார். இவரது பற்றற்ற நிலைகண்டு மகிழ்ந்து, தனக்குப் பின் ஜோதிர்மடத்தின் பீடாதிபதியாகவும் இவரையே அறிவித்தார். சிவரத்னகிரி சுவாமிகள் சித்தி அடைந்தபின், ஜோதிர் மடத்தின் பீடாதிபதிப் பொறுப்பை ஏற்றார் ஞானானந்தகிரி சுவாமிகள்.

ஆனால் மடாபதியாகத் தொண்டு செய்வதை விடத் தவம் செய்வதிலேயே அவர் மனம் பெரிதும் ஈடுபட்டது. எனவே பீடாதிபதி பொறுப்பேற்ற சிறிது காலத்திலேயே வேறொருவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு தவமியற்ற இமய மலைக்குச் சென்றுவிட்டார். தனிமையில் இறைவனை ஓயாமல் சிந்திப்பதிலும் நாள்முழுவதும் மந்திர ஜபம் செய்வதிலும் அவருக்குப் பேரார்வம் இருந்தது.


இமய மலைப் பிரதேசங்களில் பனிக் குகைகளில் பற்பல ஆண்டுகளைத் தவத்தில் கழித்தார். அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக அவர் தவம் நிகழ்த்தினார் என்று சொல்லப்படுகிறது.

பின்னர் திபெத், நேபாளம், இலங்கை, மலேசியா எனப் பல இடங்களுக்கும் சென்றார்.

வடலூர் ராமலிங்கவள்ளலாரையும் சுவாமிகள் சந்தித்துள்ளார். மதுரைக் கோவிலில் சிறுவன் ரமணனைத் தாம் கண்டதாகவும், பின்னர் மகரிஷி ரமணராக அவர் பரிணாமம் பெற்ற போது திருவண்ணாமலையில் அவரைப் பார்த்ததாகவும் சுவாமிகள் கூறியதுண்டு.

ஸ்ரீரமணர் விரூபாட்ச குகையில் வசித்த போது சுவாமிகள் அடிக்கடி அவரைச் சந்தித்து ஆன்மிக உரையாடல்கள் நிகழ்த்தியுள்ளார் என்பதும் பதிவாகியுள்ளது. சீரடி பாபா, ஸ்ரீ அரவிந்தர், சேஷாத்ரி சுவாமிகள் போன்ற அருளாளர்களை அவர் நேரில் சந்தித்துள்ளார்.

இறுதியாக தமிழகத்தில் விழுப்புரம் அருகே திருக்கோவிலூரை அடுத்து அமைந்துள்ள சித்தலிங்க மடம் என்ற சித்தர்கள் வாழ்ந்த புராதன தலத்தில் வந்து தங்கினார். அங்கு சிலகாலம் அருளாட்சி புரிந்து தன்னைத் தேடிவந்த அன்பர்களை வழிநடத்தினார். பின்னர், திருக்கோவிலூரில் இருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையில், தென்பெண்ணை ஆற்றின் வடக்குக் கரையில் ஞானானந்த தபோவனம் என்ற



ஆசிரமம் ஒன்றை ஏற்படுத்தி, அந்தத் தபோவனத்தில் தங்கி தவ வாழ்க்கை வாழலானார்.

ஸ்ரீ ஞானானந்த கிரி சுவாமிகள் அனைவராலும் தாத்தா சுவாமிகள் என்று அன்போடு அழைக்கப்பட்டார். ஆனால் தாத்தா சுவாமிகளின் வயது என்ன என்று யாராலும் கண்டறிய முடியவில்லை.

சுவாமிகளின் அன்பரான வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்கள், பலமுறை அவர் வயதை அறிய முற்பட்டுக் கேள்விகள் கேட்டிருக்கிறார்.

ஒவ்வொரு முறையும் சுவாமிகள், `மரம் பழுத்துக் கனிந்திருந்தால் அதன் பழத்தைப் பறித்துச் சாப்பிடாமல் மரத்தின் வயதையா கேட்டுக் கொண்டிருப்பது?` என்று சொல்லி தன் சரியான வயதைத் தெரிவிப்பதைத் தவிர்த்தே வந்திருக்கிறார்

கி.வா.ஜ. போலவே குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவும் சுவாமிகளின் அன்பர்களில் ஒருவர். அவர் சுவாமிகளைப் பற்றிக் கவிதை புனைந்திருக்கிறார்.

சுவாமிகள், இரண்டு பாரதியார்களை தாம் சந்தித் திருப்பதாக ஒருமுறை சொல்லி யிருக்கிறார். ஒருவர் நந்தனார் சரிதம் எழுதிய கோபால கிருஷ்ண பாரதியார். இன்னொருவர் தேசியக் கவி மகாகவி பாரதியார். எனவே இவ்விருவர் காலத்திலும் சுவாமிகள்

வாழ்ந்திருக்கிறார் எனத் தெரிகிறது.

ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் சற்றுக் குள்ளமானவர். பாரதியார் சொல்லும் குள்ளச்சாமி என்பவர் இவர்தான் என்று கருதுபவர்கள் உண்டு. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருக்கு தோதாபுரி அளித்த தீட்சை பற்றியும் விவேகானந்தருக்கு பரமஹம்சர் அளித்த தீட்சை பற்றியும் தாம் தனிப்பட்ட முறையில் அறிந்ததாக ஞானானந்தகிரி சுவாமிகள் குறிப்பிட்டதுண்டு.

இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது சுவாமிகளின் வயதை இன்னதென்று கணக்கிட முடியாமல் திகைப்பு ஏற்படுகிறது. சுவாமிகளின் வயது நூற்றியம்பது என்றும் இருநூறு என்றும் அதற்கு மேலும் இருக்கலாம் என்றும் இவ்விதமெல்லாம் பற்பல ஊகங்கள் சொல்லப்படுகின்றன. எவ்விதமானாலும் நூறாண்டுகள் தாண்டிப் பற்பல ஆண்டுகள் அவர் வாழ்ந்திருக்கிறார் என்பது உண்மை.

மகான் ஸ்ரீராமானுஜர் நூற்று இருபது ஆண்டுகள் வாழ்ந்தார். காஞ்சி பரமாச்சாரியார் நூறாண்டு வாழ்ந்தார். பாரத தேசத்தில் நெடுங்காலம் வாழ்ந்த துறவியர் இன்னும் சிலர் உண்டு.



அதிக காலம் உடல் தரித்து வாழ்ந்து பக்தர்களை நெறிப்படுத்திய துறவியர் வரிசையில் ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளுக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு.

சுவாமிகள் ஏற்படுத்திய தபோவனம் மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்தது. அங்கு வந்தவர்கள் சுவாமிகளின்

முன்னிலையில் தங்கள் மனத்தில் சாந்தி தோன்றுவதை அனுபவித்தார்கள். மலர் இருக்கும் இடத்தைத் தேடி வண்டுகள் வருவதுபோல், ஏராளமான அடியவர்கள் தபோவனத்தைத் தேடி வரத் தொடங்கினார்கள்.

தபோவனத்தில் ஞானவிநாயகர், ஞானஸ்கந்தர், ஞானபுரீசர், ஞானாம்பிகை, ஞானலட்சுமி, ஞானவேணுகோபாலர், நவக்கிரகங்கள் உள்ளிட்ட சிலைகளை நிறுவி அந்தந்த சன்னிதிகளில் வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்தார் சுவாமிகள்.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்பதை அவர் மீண்டும் மீண்டும் எடுத்துச் சொன்னார். இந்த அரிய மனிதப் பிறவியை பொருட்செல்வம் மற்றும் சிற்றின்பத்தை நாடி வீணாக்கக் கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினார். தன்னை உணர்வதும் அதன்வழி இறைவனை உணர்வதுமே மனித வாழ்க்கையின் நோக்கம் என அவர் குறிப்பிட்டார்.

தன்னை நாடிவந்த பக்தர்களை, மெல்ல மெல்ல ஆன்மிகப் படிநிலையில் உயர்த்தி முக்திக்கு வழிகாட்டினார் சுவாமிகள். தேவாரம் திருவாசகம் போன்ற பக்திப் பனுவல்களை அடியவர்களுக்கு போதித்தார். அவற்றில் இளமையிலேயே ஈடுபாடு வரும் வகையில் குழந்தைகளுக்கும் அவற்றைக் கற்பிக்கச் செய்தார்.

பஜனை சம்பிரதாயம் சார்ந்த நாம சங்கீர்த்தனத்தில் பேரார்வம் உடையவர் ஸ்ரீ சுவாமிகள். புகழ்பெற்ற நாம சங்கீர்த்தன விற்பன்னரும் ஜல சமாதியடைந்து மறைந்தவருமான ஹரிதாஸ்கிரி, இவரது பிரதான சீடர்களுள் ஒருவர்தான்.

ஹரிதாஸ்கிரி தாம் செல்லும் இடங்களிலெல்லாம் தமது குரு ஸ்ரீஞானானந்த கிரியின் பாதுகைகளை உடன் எடுத்துச் சென்று பூஜித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீஞானானந்த கிரி சுவாமிகள் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பத்தாம் நாள் இறைஜோதியில் ஐக்கியமானார். அவரைப் போன்ற துறவிகள் சித்த புருஷர்கள். அவர்கள் ஸித்தி அடைந்தாலும் காலம் கடந்தும் வாழ்கிறார்கள். அவர்களின் பொன்னுடல் நம் கண்ணை விட்டு மறைந்தாலும் அருளுடல் நிரந்தரமாய் வாழ்கிறது.

அடியவர்கள் சொல்லும் சில சம்பவங்கள் மூலம் அத்தகையோரது வாழ்க்கையின் சில துளிகளை நாம் அறியலாமே அன்றிப் பூரணமான வாழ்வை அறிய இயலாது. அது நம் கற்பனைக்கு அப்பாற்பட்ட மகத்துவம் உடையது. திருக்கோவிலூர் தபோவனத்தில் ஸ்ரீஞானானந்தகிரி சுவாமிகளின் சமாதிக் கோவில் உள்ளது.

வாய்ப்பில்லாவிட்டாலும், வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு வாழ்வில் ஒருமுறையாவது தபோவனம் சென்று சுவாமிகளின் அருட்கடாச்சத்தை பெற்று நமது கர்மவினைகளைக் குறைத்துக் கொள்வோம்.

●

ஸ்ரீ சங்கர் மகராஜ் சரித்திரம் 2

ஸ்ரீ சங்கர் மகராஜுடைய பிறப்பு பற்றி 3 மூன்று விதமாக கூறப்படுகின்றது.


அதில் முதலாவது, நாசிக்குக்கு அருகில் சடானா தாலூக்காவில் இருக்கும் அந்தாப்பூர் என்னும் கிராமத்தில் சிம்னாஜி என்கிறவர் வசித்து வந்தார். அவருக்கு குழந்தை பாக்கியம் இல்லை. அதனால் குழந்தை வரம் வேண்டி அனுதினமும் அவர் பரமசிவனை பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் அவருக்கு ஒரு கனவு வந்தது. அதில் கிராமத்துக்கு வெளியே இருக்கும் ஒரு புதரில் அவர் குழந்தையை கண்டெடுப்பது போல ஒரு காட்சியை அவர் கனவில் கண்டார்.

இந்த கனவை ஒரு தெய்வீக காட்சியாக அவர் எடுத்துக் கொண்டு, கிராமத்தின் அருகில் இருக்கும் காடுகளுக்குச் சென்று குழந்தையை தேடினார். அவருடைய நம்பிக்கை வீணாகவில்லை. அவர் நினைத்தது போலவே ஒரு புதருக்கருகே 2 வயதுடைய ஒரு பாலகனை கண்டார். அந்த குழந்தையை வீட்டுக்கு அழைத்து வந்து சங்கர் என்று பெயரிட்டார். பகவான் சங்கரரே தனக்கு அளித்த பரிசு இந்த குழந்தை என்று அவர் கருதினர். சங்கர் சிறு வயதாக இருக்கும்போதே தனியாகக் காட்டுக்குச் சென்று தியானம் செய்து விட்டு, இரவு நேரத்தில் வீடு திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒருநாள் சங்கர் தன் வளர்ப்பு பெற்றோரிடம் அவர்களுக்கு சீக்கிரமே ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்று சூசகமாக கூறினார். சங்கர் கூறியது போலவே சில காலங்களில் அவர்களுக்கு குழந்தை பிறந்தது. உடனே சங்கரும் அவர்களுடைய வீட்டை விட்டு கிளம்பி இமயமலைக்குச் சென்று விட்டார்.

அந்தாபூரில் சிறிய குன்று ஒன்று உண்டு. அந்த குன்றின் மேல் இப்போது தாவல் மாலிக் பாபாவுடைய தர்கா இருக்கிறது. அந்த குன்றில்தான் மகராஜ் கண்டெடுக்கப்பட்டார் என்று கூறுகின்றனர். சிம்னாஜியுடைய குடிசை இருந்த இடத்தில் இப்போது 'ஸ்ரீ சங்கர் மகராஜ் பிரகட் ஸ்தான் க்ஷேத்ரம்' என்கிற கோவில் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. இப்போதும் அந்தாப்பூரில் சிம்னாஜியின் சந்ததியினர் வாழ்ந்து வருகிறார்கள்.

அந்தாப்பூர் கோவிலில் மகராஜுடைய சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், சிவலிங்கம், நந்தி, மாருதி மற்றும் கணபதி மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.



அந்த சிலைகள் அங்கு ஒரு சுவாரசியமான விதத்தில் வந்து சேர்ந்தன.

ஒருமுறை மகராஜ் அந்தாபூரில் இருந்த போது ஒருவர் அவரை சந்திக்க வந்தார். அவரிடம் மகராஜ் நான் உனக்கு புதையல் எடுத்து தருகிறேன் வா! என்று கூறிவிட்டு ஒரு புளியமரத்தினருகில் அழைத்துச் சென்று , அதற்கு கீழ் தோண்டுமாறு கூறினார். வந்தவர், ஆஹா நமக்கு செல்வம் கிடைக்கப்போகிறது, இது மட்டும் கிடைத்தால் என் பணக் கஷ்டங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்கிற குதூகலத்துடன் வேகமாகத் தோண்டினார்.

அப்போது அவருடன் சில கிராமத்தினரும் சேர்ந்து கொண்டனர். சில அடிகள் தோண்டியவுடன்,

மாதங்கி பாலாஜி

அங்கு கடவுளின் திருவுருவச் சிலைகள் தென்பட்டன. பணம் கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்புடன் இருந்தவர்களுக்கு இது பேரதிர்ச்சி. அந்த இடத்தில் சிவலிங்கம், நந்தி, மாருதி, கணபதி சிலைகள் இருந்தன. அந்த சிலைகளே பின்பு அந்தாப்பூர் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அந்தாபூர் என்கிற இந்த ஊர் சீரடியில் இருந்து சுமார் 150 km தூரத்தில் உள்ளது.

இந்த கதையை கவனித்தீர்கள் என்றால், புதையல் என்று கூறியவுடன் நாம் அனைவரும் கருதுவது பணத்தை மட்டும்தான்! ஆனால் குருமார்களோ நமக்கு ஞானம் எனும் செல்வதைத்தான் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் நாமோ மீண்டும் மீண்டும் லௌகீகமான விஷயங்களையே அவர்களை கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

பணம் மனிதனுக்கு கண்டிப்பாக தேவைதான். அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் நாம் ஒரு விஷயத்தை புரிந்து கொள்ள தவறிவிடுகிறோம். நம் எண்ணம் சொல் செயல் மூன்றும் சரியாக இருந்து, குருவின் மீது நம்பிக்கையும் சரணாகதியும் இருக்கும் பட்சத்தில் அவர்கள் நம்முடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்து, நம்மை ஞானத்தை நோக்கி இழுத்து சென்று விடுவார்கள் என்று உறுதியாக நம்ப வேண்டும். அதுதான் உண்மையான குருபக்தி,

இரண்டாவது கதை, மராத்வாடா என்னும் பகுதியில்

பீட் மற்றும் பர்பனி கிராமத்தில் இந்த சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. குழந்தையில்லாத பெண் ஒருத்தி குழந்தை வரம் வேண்டி ஒரு சிவன் கோவிலுக்கு சென்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். சுமார் 18 ஆண்டுகள் அவள் சேவை செய்த பிறகு அந்த கோவிலில் ஒருநாள் அவளை 8 வயது சிறுவன் ஒருவன் சந்திக்க வந்தான். அவனுடைய கைகளும் கால்களும் வளைந்து ஊனமுற்ற தோற்றத்துடன் காணப்பட்டன.

அச்சிறுவன் அப்பெண்மணியின் மார்பகங்களைத் தொட்டான். உடனே அவளின் மார்பகங்களில் பால் சுரக்கத் தொடங்கியது. அப்பெண்மணி அச்சிறுவனிடம், "நீ என் மார்பகங்களைத் தொட்டவுடன் பால் சுரந்தால், நீயே என் மகன். நீ என்னுடனேயே தங்கிவிடு" என்று கூறினாள். "விரைவில் உங்களுக்கு இரட்டை குழந்தைகள் பிறக்கப் போகின்றன. அதுவரை நான் உங்களுடன் தங்குகிறேன்" என்று அவன் கூறினான். அச்சிறுவனை 'சங்கர்' என்று அழைத்தனர். அச்சிறுவன் கூறியது போலவே சில காலங்களுக்குப் பிறகு அவளுக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தன. உடனே சங்கரும் இமயமலைக்கு கிளம்பி சென்று விட்டார்.

இந்த சம்பவம் உண்மை என்று நிரூபிக்கும் வகையில் மகராஜ் சமாதி அடைந்த பிறகு, மகராஜுடைய சமாதி கோவிலை தரிசனம் செய்வதற்காக 80–90 வயது மதிக்கத்தக்க இருவர் வந்து, எங்கள் மூத்த சகோதரர் இங்குதான் சமாதி அடைந்திருக்கிறார் என்று கூறினர். இச்சம்பவத்தை பலர் நேரில் கண்டிருக்கின்றனர்.

மூன்றாவது கதை, இந்த



சம்பவத்தை ஸ்ரீ சங்கர் மகராஜின் அடியவரான Dr. நாகேஷ் தானேஸ்வர் தன் சுயசரிதையில் விவரித்துள்ளார். இதை மகராஜே அவரிடம் தெரிவித்ததாக அவர் கூறுகிறார். ஒருநாள் நாகேஷ் மகராஜுடன் உரையாடிக் கொண்டிருந்த போது அவர் மகராஜிடம் உங்களுடைய வயது என்ன என்று கேட்டார். நீதான் மருத்துவர் ஆயிற்றே நீயே கண்டுபிடி என்று

மகராஜ் கூறினார்.

Dr.நாகேஷும் மகராஜுடைய கைகள் கால்கள் மற்றும் அவருடைய நாக்கின் நீளம், பற்கள் போன்ற உறுப்புகளை சோதனை செய்துவிட்டு, கண்டிப்பாக அவருடைய வயது 100 ஐ தாண்டியிருக்கும் என்று கணித்து, அவரின் வயது 125 ஆக இருக்கலாம் என்று கூறினார். மகராஜும் அதை ஒப்புக்கொண்டு, அவர் பிறந்த கதை பற்றி அவரிடம் விவரித்தார்.

தொடர்ந்து மகராஜ் அவரிடம், 1800 ஆம் ஆண்டு மங்கள்வேடாவில் உபாசினி என்னும் குடும்பப் பெயருடன் உள்ள ஒரு குடும்பத்தில் தான் பிறந்ததாகவும், சிறு வயதில் குறும்புத்தனமான குழந்தையாக இருந்ததாகவும் கூறினார். தனக்கு சுமார் 7 அல்லது 8 வயது இருக்கும்போது, தன் கையில் வில் அம்பை எடுத்துக் கொண்டு ஒரு மானை துரத்திக்கொண்டு ஓடினார். அவ்வாறு அவர் துரத்திக்கொண்டே மச்னூர் என்னும் ஊரில் இருக்கும் ஒரு சிவன் கோவிலை அடைந்தார்.

அந்த இடத்தில் உயரமான சந்தியாசி ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் மகராஜிடம் மானின் மீது அம்பு செலுத்தாதே என்று கூறிவிட்டு மானை தன் கையில் எடுத்துக் கொண்டார். சங்கர் மகராஜோ அதை கேளாமல் மானை நோக்கி அம்பு செலுத் தினார். ஆனால் அம்பு சந்நியாசியின் மேல் பட்டு வளைந்து கீழே விழுந்தது. உடனே சந்நியாசி மகராஜை தன் அருகே அழைத்து அணைத்துக் கொண்டார்.

இவ்வாறு அவர் மகராஜை தொட்டு தீக்ஷை அளித்தார். மகராஜ் சந்நியாசியுடன் சுமார் 6 மாதங்கள் தங்கியிருந்தார். அவருக்கு பலவிதமான ஆன்மீக பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அவர் க்ஷேத்ராடனம் அனுப்பப்பட்டார். அவர் இமயமலைக்கு சென்று கடுமையாக தவம் செய்தார். பின்னர் அஹமதுநகருக்கு அருகில் இருக்கும் வ்ருதேஸ்வர் மலையில் இருந்த சித்த யோகிகளுடன் சிலகாலம் தங்கியிருந்தார்.

மகராஜ் கோவிலில் கண்ட சந்நியாசி வேறுயாருமல்ல அக்கல்கோட் மகராஜ் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர்தான். ஆகவே ஸ்ரீ சங்கர் மகராஜ் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தரின் சிஷ்யர் என்பதை நாம் இந்த சம்பவத்தின் மூலம் அறிந்து கொள்கிறோம். மகராஜ் இந்த உடலோடு சுமார் 150 ஆண்டுகள் வாழ்ந்ததாக கூறப்படுகிறது. ஆனால் இது அவருடைய உண்மையான கதை என்று ஆதாரத்துடன் நிரூபிக்கப்படவில்லை.

பரம்பொருள் பிறப்பு இறப்பு என்னும் தன்மைக்குள் அடங்குமா? மகராஜ் பரம்பொருள் தவிர வேறெதுவும் இல்லை அல்லவா? அப்படியிருக்க அவரை சாதாரணமான ஒரு மனித பிறவி போல இப்படித்தான் என்று வரையறுத்துக் கூறி ஆராய்ந்து பார்ப்பது என்பது நம்முடைய சிறுமையான சுருங்கிய தன்மையை அல்லவா காட்டுகிறது? ஆகவே குருமார்களின் பிறப்பு தாய் தந்தை போன்ற விவரங்களில் கவனம் செலுத்துவதை விட அவர்

நமக்கு அளித்த அறிவுரைகளின் படி வாழ்ந்து முக்தியை நோக்கி பயணப்பட வேண்டும்.

சங்கர் மகராஜ் தன்னுடையது என்று எதையும் அவர் வைத்து கொண்டதில்லை. ஒரே இடத்தில் தங்கியதில்லை. அவருடைய பக்தர்கள் அன்புடன் அழைத்தால் அந்த இடம் குடிசையோ மாளிகையோ அந்த இடத்தில் போய் தங்கிவிடுவார். அவர்



மும்பை, புனே, அஹமதுநகர், சோலாப்பூர், நாசிக் மற்றும் அக்லுஜ் போன்ற இடங்களில் உள்ள தன் பக்தர்களின் வீட்டில் தங்குவார்.


மகராஜ் வந்தவுடன் பக்தர் களின் இல்லங்கள் விழாக்கோலம் பூண்டுவிடும். பஜனைகள், பிரவசனங்கள், பாராயணம் போன்றவை ஏற்பாடு செய்வார்கள். ஞானேஸ்வரி, சமர்த்த ராமதாஸின் சரித்திரமான தசபோதம், குருச்சரித்திரம், ஸ்ரீமத் பாகவதம் போன்றவை பாராயணம் செய்யப்பட்டும்.

மகராஜ் பேசும் போது குழந்தைதனமாக பேசுவார் என்பதால், அவர் சொற்பொழிவு செய்வதில்லை. அவருடைய சீடர்களை சொற்பொழிவு செய்ய ஊக்குவிப்பார். அவர் புனேவில் பிரபலமான வழக்கறிஞரான ராவ் சாஹேப் மெஹெண்டலே என்கிற பக்தரின் வீட்டில் தங்கும் போது, அவருடைய மனைவியான தாய்சாஹேப் மெஹன்டலே ஞானேஸ்வரியை பிரவசனம் செய்வார். அதுமட்டுமல்லாமல், கோகுலாஷ்டமி, சிவராத்திரி போன்ற விழாக்களையும் விமரிசையாக கொண்டாடுவார்.

சங்கர் மகராஜ் அஹமதுநகருக்கு செல்லும் போதெல்லாம் மிரி என்னும் ஜில்லாவைச் சேர்ந்த சர்தார் மிரிக்கர் என்னும் பக்கதரின் வீட்டில் அடிக்கடி தங்குவார் ஆனால் அவர் அங்கு செய்த லீலைகள் மற்றும் தகவல்கள் கிடைக்கவில்லை. இருப்பினும் மகராஜுக்கு அஹமதுநகரில் Dr. நாகேஷ் தானேஸ்வர் மற்றும் மேஜர் கணேஷ் அப்யங்கர் என்கிற இரு நெருங்கிய பக்தர்கள் இருந்தனர். நாம் அடுத்த மாதம் Dr. நாகேஷ் தானேஸ்வருக்கும் சங்கர் மகராஜுக்கும் உள்ள தொடர்புகள் மற்றும் கதைகளை அறிந்து கொள்வோம்.

ஸ்ரீ சங்கர் மகராஜுக்கு ஜயம் உண்டாகட்டும்!!

தொடரும்



தொடர் - 33

திருவருள் தேடி

சத்குரு வாழ்க, சாய் மஹராஜ் பிரபஞ்ச பேராற்றல் பாரெங்கும் பரந்து விரிந்து வளமுடன் நலமுடன் வளர்ந்து பெருகட்டும். சாய்ராம் நம்மை ஆட்கொண்டு இன்றளவும் காத்து நிற்கும் அனுபவத்தை உங்கள் அனைவருடனும் தொடர்ந்து பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக்கு களம் அமைத்துக்கொடுத்த ஸ்ரீராம் பாபாவிற்கு நன்றி கலந்த நமஸ்காரம்.

நமது ஆன்மீகப் பயணத்தில் பிரபஞ்ச சக்தியால் நமக்கு வழங்கப்படும் ஆதரவாய் பலபேர் நம்மோடு பயணித்து ஊக்கமளித்து நல்வழி காட்டும் அன்பிற்கு அளவே இல்லை. அந்த வகையில் போன இதழில் நமக்கு ஸ்ரீராம் பாபா அவர்களின் அறிமுகம் மற்றும், அவரது ஆற்றலை, நாமறிந்த அன்பர்களில் தேவைப் படுபவர்களுக்கு கொண்டு சேர்த்து அவர்களது வாழ்வில் வளம் சேர்க்கும் சேவைப்பற்றி பகிர்ந்து கொண்டோம்.

சுந்தர் சாய்
9789404451

யானிடம் உண்மையான தேடல், உறுதியான மன நுட்பம் இருக்கின்றதோ அவர்களுக்கு உதவியும் கண்டிப்பாய் கிடைக்கும் என்பதற்கு நம்பிக்கை அளிக்கும் உதாரணம் நம்மைச்சுற்றி நிறையவே இருக்கிறது.


இப்படித்தான் நாம் இலங்கை பயணம் செல்லும் நேரங்களில், அங்குள்ள சாய் பக்தியை கண்டு பிரமிப்பு அடைந்து, சற்றே

பொறாமை படுகின்ற அளவிற்கு ஆச்சர்யம் அடைந்ததுண்டு. சிலருக்கு சாய்பாபா ' மிராக்கிள் ' செய்து அவர்கள் வாழ்வை மாற்ற வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு மிக அதிகம் இருக்கும்.

அம்மாதிரி நபர்களிடம் பொறுப்பை சாய் கிட்டே ஒப்படைத்து, நீங்கள் செய்ய வேண்டிய விஷயங்களை முனைப் போடு, கவலை மற்றும் பயமின்றி, செய்யுங்கள் என்று சொல்வதுண்டு. உண்மையிலேயே இலங்கை போன்ற நாடுகள் அளவுக்கு அதிகமாகவே சவால்களை எதிர்கொண்டு மக்கள் வாழ்வில் நிம்மதியின்றி கஷ்டம் அனுபவிப்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். நாமெல்லாம் அதிர்ஷ்ட சாலிகள் தான். சவால்கள் குறைவே.

அந்த கால கட்டங்களில் இவர்களுக்கு சரியான மார்க்கம், எண்ணங்களில் மாற்றங்கள் ஏற்பட நம்மால் இயன்ற எல்லா முயற்சிகளையும் செய்து உதவ வேண்டும் என்ற உறுதியான ஏக்கம் இருந்தது. சிலருக்கு கணவர்களின் ஆதரவு கொஞ்சமும் இல்லை என்கிற சூழ்நிலையில் குடும்பம், குழந்தைகளின் எதிர்காலம் மிகப் பெரிய சவாலாய் பயம் காட்டும்.

அப்படிஓர்பக்தைக்குஆதரவான வார்த்தைகள் மூலம் அடிக்கடி பாபாவின் பெயரால் உத்தரவாதம் அளிக்க வேண்டி வந்தது. அவருக்கு இரண்டு மகள்கள். அவர்களின் படிப்பு, வேலை, திருமணம் அனைத்தையும் பாபா நன்கு கவனித்துக் கொள்வார் என உறுதியளித்தேன்.



மேலும், அவரிடம் உங்கள் மகளின் திருமணத்திற்கு பாபா நிச்சயம் வந்து வாழ்த்துவார் என்று அடிக்கடி நம்பிக்கை ஊட்டி வந்தேன். அவரும் நீங்க தான் எங்கள்ட பாபா! எனவே அவசியம் நீங்களும் வரவேண்டும் என்று சொல்லுவார்.

4-5 வருடங்களாக இந்த நம்பிக்கை வார்த்தைகள் கூறிக் கொண்டே வரும் போது அவர் தனது தாயுடன் இந்தியாவிற்கு வந்து எனது குழுவினரோடு இணைந்து கொண்டு ஷீர்டி, பண்டரிபுரம், பிட்டாபுரம் என எல்லா இடங்களுக்கும் சென்று தர்சனம் செய்து வந்தோம். தீவிரமான முயற்சிகுப்பின் முதல் பெண்ணின் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டு அற்புதமாக, சற்றும் எதிரே பாரா விதமாய், அந்த திருமணத்தில் ஸ்ரீராம் பாபாவும், நானும் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதித்தோம்.

அது வரை ஸ்ரீராம் பாபாவை அவர்களுக்கு அறிமுகம்

கிடையாது. இலங்கைக்கு ஸ்ரீராம் பாபா வருவது பற்றிய திட்டமும் முதல் முறையாக திடீர்னு முடிவு செய்யப்பட்டது. யாரால்? அந்த திருமண வைபவத்தில் கலந்து கொண்டு ஸ்ரீராம் பாபா, பாபாவின் இடத்தை நிரப்பியதும், தேவ் வீட்டு விருந்துக்கு அழைக்கப்பட்டு, பாபா வேறு ஒரு உருவத்தில் ஆஜரானதை எனக்கு நினைவு படுத்தியது.

அந்தப் பயணமே முதலாவதாக ஸ்ரீராம் பாபா இலங்கையில் தியானப் பயிற்சி மற்றும் சத்சங்கம் தொடங்கு வதற்கான முதல் அடி எடுத்து வைக்க நம்மை கருவியாக்கி சாய்ராம் நிகழ்த்திய "கல் ஒன்று மாங்காய் இரண்டு" நாடக அரங்கேற்றம். வியப்பாவும் விருவிருப் பாகவும் இருக்கின்றது அல்லவா? பாபா திருமணத்திற்கு வருவார் என்று என்னைக் கூற வைத்து சர்பிரைசாக வெளிநாட்டுக்கே வந்து, 'கொடுத்த வாக்கை காப் பாற்ற என் உயிரையே கொடுப்பேன்' கிற சத்யமான வார்த்தைகள் தூய பக்திக்கு கிடைக்கும் அங்கீகாரம்.

அதற்கு முன்பே ஸ்ரீராம் பாபாவின் உன்னதமான தியான பேராற்றாலை இலங்கை வாழ் நமது உடன்பிறவா சொந்தங்களையும் வாழ்த்த, வழிகாட்ட உபயோகிக்க வேண்டும் என்ற ஓர் தாபம் நமக்கிருந்தாலும், நேரமும் காலமும் கூடி வந்தது சாய் மஹராஜ் திவ்ய சங்கல்பத்தினால் மட்டுமே என்பது உறுதியாக உறைத்தது. இந்த வாய்ப்பு அமைய உறுதுணையாக இருந்த முக்கிய அன்பர்களாய், சரஸ்வதி அம்மா, தனுஷ்யா – ரவிசங்கர் தம்பதியினர் முன் வந்து உதவி புரிந்ததால் இந்த பயணம் எளிதாக நிறைவேறியது.

கொட்டாஞ்சேனை சாய் நாதன் சரணாலயத்தில் Dr.மருதினி –கணேஷ் அவர்கள் விரும்பியபடி, வியாழன் மாலை சத்சங்கத்துடன் துவங்கியது பாபாவின் பரிபூரண ஆசியை தெளிவாக உணர்த்தியது. Dr. மருதினி ஸ்ரீராம் பாபாவைப் பற்றி அறிந்து உடனே சென்னையில் நேரில் சந்தித்ததும் இலங்கை பயணத்திற்கு சற்று முன்பாக தற்செயலாய் நிகழ்ந்ததும் இங்கே குறிப்பிடுவது அவசியம் என எண்ணுகிறேன்.

கிருஷ்ண மலர் எனும் அந்த இலங்கை சாய் பக்தையும் மிக்க மகிழ்ச்சியுடன் ஷீர்டி சாய் வடிவில் திடீரென்று ஸ்ரீராம் பாபாவும் திருமணத்திற்கு வந்து ஆசீர்வதித்ததை புரிந்துணர்ந்து, அவருடைய தியானப்பயிற்சியில் இணைந்து, மனதளவில் நிம்மதியாக உணர்வதாகவும், அதற்கு வழி செய்ததாக நமக்கு நன்றி செலுத்தி ஷீர்டி பயணக்குழுவிலும் நம்மோடு பயணித்து, இன்னும் இரண்டு நண்பர்களுக்கும் அந்த அனுபவங்களை பெற உதவி செய்திருக்கிறார்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் "என்ற மனப்பான்மை நம் ஒவ்வொருவருக்கும் இருந் தால், இறைப்பணி எவ்வளவு எளிமையாகவும், அருமையாகவும் வாழ்வில் மாற்றங்களை ஏற் படுத்தும் அன்பு நண்பர்களே! சற்றே சிந்தித்து இணைந்தே செயல் படுவோம். வாரீர், சிறு துளி

பெரு வெள்ளமாகட்டும். வாழ்க வையகம்.

சற்றே பின்னோக்கி பயணிப் போம். ஒரு மொபைல் அழைப்பு. "சுந்தர் சாய் நான் மாதங்கி பாலாஜி பேசுகிறேன். கூத்தனூர் சரவணன் தங்கள் நம்பர் கொடுத்தார் " என்ற அறிமுகத்துடன். கோபுரம் டிவி இல் ' குரு தத்த பரம்பரா ' எனும் தொடரில் பேசுவதை பார்த்து தெரிந்து தொடர்பு கொள்வதாகவும், ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் சரிதாமிருதத்தை தான் தமிழ் பெயர்ப்பு செய்வதாகவும் தெரிவித்து வியப்பில் ஆழ்த்தினார். அவரது ஆர்வமும், கடின முயற்சி யும் நமக்கு மிகவும் பிரியமான தத்த அவதாரம் கலியுகத்தில் முதலா னாதும், சாய் அவ தாரத்திற்கு முன்னோ டியானதும் பற்றியது.

இன் னே ர் மு க் கி ய மா ன அறிமுகம் சாய் தர்பாரில் என உணர்ந்து இன்றளவும் தொடர்ந்து பயணிக்கும் உன்னதமான ஆத்ம நட்பு. சர்வ நிச்சயமாக முற்பிறப்பின் தொடர்பு. ஏனென்றால் அறிமுகம் ஆனவுடனேயே, தாமதம் ஏதுமின்றி சந்தித்து குடும்ப நட்பாய் மலர்ந்து சாய் சேவை பரிமளிக்க ஆரம்பித்து விட்டது. மிகவும் உறுதியான ஆன்மீக வித்து, இளமையிலேயே பிரவாகமாய் பாயும் இனம் புரியாத ஸ்ரீ குரு சேவா! குரு பக்தி என்ற வார்த்தை யை விட சேவா அல்லது இனம் புரியாத ஆர்வமான தேடல் என்பதே சிறந்த பொருத்தமாகும். அத்தனைக்கும்.. துணை நிற்கும் தெய்வீக வாழ்க்கை துணையாக கணவர் திரு. பாலாஜி.

மாதங்கி பாலாஜி எழுதிய சம்பூர்ண ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் தமிழ் வடிவத்தை படித்து அதில் கிடைத்த அற்புதமான புதிய தகவல்கள் நம்மை மிகவும்



ஈர்த்தது. எனவே அவரது இந்த புத்தகம் எழுதும் நேரத்தில் அவருக்கு கிடைத்த அசாதாரண அனுபவங்களை அருகே இருந்து அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. நம் பங்கிற்கு அவரை ஊக்கப்படுத்தி, துரிதப்படுத்தி, குரு பூர்ணிமா நன்னாளில் ஸ்ரீசக்ர தத்த ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் திருத்தலமான மேல்சிருனையில் (காஞ்சிபுரம்), ஸ்ரீமாதா வல்லபானந்தமயீ அம்மா அவர்கள் முன்னிலையில் ஸ்ரீபாதர்

பாதுகையில் சமர்ப்பணம் செய்ய உடன் பயணம் செய்யும் பாக்கியம் கிடைத்தது.

இந்த புத்தக அச்சிடும் பணி, வெளியீட்டு விழா போன்ற சேவைகளில் அடிக்கடி சந்தித்து, அதன் மூலம் சில முக்கியமான வர்கள் அறிமுகமும், நேர்முகமும் நமக்கும் கிடைத்தது. வெளியீட்டு விழாவில் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் வாய்ப்பும் கிடைத்தது. மிகவும் விருவிறுப்பான இந்த கால கட்டத்தில், மாதங்கி பாலாஜியை, மஞ்சரி சாய், குரு ஸ்ரீராம் பாபா மற்றும் பலருக்கும் அறிமுகம் செய்யும் வாய்ப்பு கிட்டியது.அந்த சமயம் நடந்த சில விஷயங்கள் தெய்வ சங்கல்பத்தினால் தொடர் நட்பு மற்றும் சேவைக்கு வித்தாய் அமைந்ததோடன்றி, மாதங்கி பாலாஜியின் ஆன்மீக வாழ்வில் திருப்பு முனையாக அமைந்தது.

மாதங்கி பாலாஜி அவர்கள் ஸ்ரீபாதர் புத்தகம் எழுதும் நேரத்திலேயே அதனைத் தொடர்ந்து தமிழில் "அக்கல்கோட் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்த மஹராஜ் லீலாம்ருதம்" எனும் அறிய தொகுப்பு நூல் ஒன்றை எழுதி வெளியிடும் சேவைக்கு உந்துதல் ஏற்பட்டது.ஸ்வாமி சமர்த்தரைப் பற்றிய விரிவான நூல் தமிழில் அதுவரை இல்லாதிருந்தது. தமிழ் நாட்டில் அதுவும் காஞ் சிபுரம் அருகாமையிலேயே ஸ்ரீ ஸ்வாமி சமர்த்த சேவா சமஸ்தான் என்னும் மாருதிபுரம் ஸ்வாமி சமர்த்த மஹாராஜ் கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்ற உடனேயே வெளியிட வேண்டிய அவசரமான தேவை நெருக்கியது. இவை தற்செயலாய் ஒன்றிணைந்த சம்பவம். ஆனால் இதற்கு பின்னரும் இறைவன் திட்டமிட்டு செயல் படுத்துவதை பல அனுபவங்கள் தெளிவாக்கியது.

கொஞ்சம் கூட இடைவெளி இன்றி, ஓய்வுமின்றி குடும்பத்தையும் கவனித்துக்கொண்டு, வேற்று மொழிகளில் கிடைக்கும் புத்தகங்க ளிலிருந்து லீலைகளையும், சம்பவங் களையும் புரிந்து மொழிபெயர்த்து கோர்வையாக எழுத வேண்டும். மாதங்கி, பாலாஜி, மஞ்சரி சாய், நாம் எல்லோரும் அக்கல்கோட் விஜயம் சென்று எல்லா இடங்களையும் தர்சன் செய்ய ஒரு உன்னத வாய்ப்பு கிட்டியது. சற்றும் எதிரே பாராமல் அங்கு பழைய அரண்மனையில் இளவரசரை சந்தித்து உரையாட வாய்ப்பு அமைந்தது. என தெய்வீக அனுபவம் நிறைந்த பயணமாய் மன நெகிழ்ச்சி அடைந்தது. ஸ்ரீபாதர் மற்றும் ஸ்வாமி சமர்த்தர் என இரண்டு கோவில்களிலும் டிரஸ்ட்டி எனும் பொறுப்பு நமக்கு.

இவை நம்மை தேடி வந்த அருமையான அனுபவ வாய்ப்புக்கள் – மாதங்கி பாலாஜியின் அறிமுகம் மூலம் கிட்டியது. குருவருள் நமக்கு தேடிவந்து அருளும் ஒவ்வொரு அறிமுகமும், ஆன்மீக பயணத்தில் தெய்வீக அனுப வமும் மெயிசிலிர்க்க வைப்பதை வாசகர்கள் அனைவருமே உணரலாம். மேலும் தொடருவோம். குரு வாழ்க, குருவே துணை – என்றும் எல்லோர்க்கும் எல்லாமு மாய் – உங்கள் சுந்தர் சாய்.

மீண்டும் தொடர்வோம்

பயணக்கட்டுரை

தனிமைப் பயணம்



பெண்களுக்கு குறிப்பாக குடும்ப பெண்களுக்கு தனியாக ஒரு இடத்திற்கு செல்ல வேண்டுமென்றால் ஆயிரம் தடைகள் குடும்பத்திலிருந்தே உண்டானாலும், முக்கியமாக நமது சோம்பேறித்தனத்தினால் பல வாய்புகளை நாமே தவிர்த்து விடுகின்றோம்.

குரு தனது சத்சங்கத்தில் பலமுறை தனிமையாக பயணம் செய்யுங்கள். உங்களுக்குள் பல மாற்றங்களை உணர்வீர்கள் என்று கூறுவார். தனியாக பயணம் செய்ய வேண்டும் என்கிற உத்வேகம் அவ்வப்போது எழுந்தாலும், பயம், சோம்பேறித்தனம் மற்றும் நான் எதிர்பார்க்கும் வசதிகள் கிடைக்குமா என்ற பல குழப்பங்கள் என்னுள் எழும்.

ஆனாலும் எல்லா விஷயத்திலும் எனக்கு ஊக்கம் அளித்து 'நான்' வெடித்துக் கொண்டு வெளியே வருவதற்கு ஊக்க சக்தியாக திகழும் எனது கணவர் திரு.பாலாஜியின் உந்துதல்தான் முதன் முறையாக அஹோபிலம் செல்ல தூண்டியது. சென்ற ஆண்டு இரண்டு நாட்கள் ஒரு பயண ஒருங்கிணைப்பாளர் மூலம் அஹோபிலம் பயணம் செய்தேன். அது எனக்கு ஒரு நம்பிக்கையை அளித்தது.

அதன் தொடர்ச்சியாக கடந்த ஜனவரி மாதம் 4 ஆம் தேதியன்று ஒரு பயண ஒருங்கிணைப்பாளர் மூலம் காஞ்சிபுரத்தில் உள்ள திவ்ய தேசங்களுக்கு சென்றேன். இம்முறை குருஜி கூறும் 'தனிமையில் பயணம்' என்ற எண்ணத்துடன் சென்றேன். பயணம் எண்ணவோ ஒரு நாள்தான், ஆனால் கிடைத்த அனுபவங்கள் ஏராளம். அதை பகிர்ந்து கொள்வதுதான் இந்த கட்டுரையின் நோக்கம்.

நான் ஒரே நாளில் சென்ற

திருமதி. மாதங்கி பாலாஜி

15 கோவில்களின் அமைப்பைப் பற்றியோ அதன் தலபுராணங்களையோ அந்த கோவில்களுக்கு செல்வதால் கிடைக்கும் புண்ணிய பலன்களைப் பற்றியோ கூறப்போவதில்லை. தனிமையில் மேற்கொள்ளும் பயணத்தின் ஆனந்தத்தைப் பற்றியும், அதன் அவசியம் பற்றியும், அதன் மூலம் நான் அடைந்த புண்ணியத்தையும் கூறப்போகிறேன்.

பயண ஒருங்கிணைப்பாளர் மூலம் சென்றாலும், அந்த குழுவில் இருந்த சுமார் 50 நபர்களும் எனக்குப் புதியவர்களே! எனக்கு அடுத்த சீட்டில் அமர்ந்திருக்கும் பெண்மணிகூட புதியவர்தான் என்பதால் வெறும் சிரிப்பை மட்டும் தான் பகிர்ந்து கொள்ளமுடியும் என்பது இதுபோன்ற பயணங்களின் சிறப்பம்சம்.


பயணத்திற்கு முன்பு குருவின் கூற்றுப்படி நான் ஒரு சில தீர்மானங்களை எடுத்துக்கொண்டேன். யாரிடமும் தானாக போய் அவர்களின் விவரங்களை கேட்கக் கூடாது. பேச முயலக் கூடாது, முடிந்த வரை தனியாக சுற்றி பார்த்துவிட்டு வண்டியில் வந்து அமர்ந்து கொள்ள வேண்டும், கோவில் சிற்பங்களின் அழகை ரசித்து பார்க்க வேண்டும், அந்த இடங்களில் உள்ள சக்தியை உணர முற்பட வேண்டும் போன்றவை ஆகும்.

காலை சரியாக 5.30 மணிக்கு வண்டி சென்னை அசோக் பில்லரில் இருந்து புறப்பட்டது. புறப்பட்டவுடன் ஒருங்கிணைப்பாளர் நாம் எந்தெந்த கோவில்களுக்கெல்லாம் செல்ல போகிறோம், அதன் புராணம் என்ன என்ற செய்தியை விளக்கும் வகையில் வேளுக்குடி ஸ்வாமியின் ஆடியோவை ஒலிக்கச் செய்தார். எனக்கு அதன்மீது ஆர்வம் இல்லாததாலும், காலையில் விரைவாக விழித்துக் கொண்டதாலும் அதை கேட்ட முடியாதபடி தூக்கம் கண்ணை சுழற்றிக்கொண்டு வந்தது. காஞ் சிபுரம் வந்தடைந்தபோதுதான் விழித்துக்கொண்டேன்.

அவர்கள் ஏற்பாடு செய்த இடத்தில் காலை உணவை முடித்து கொண்டு ஒவ்வொரு கோவிலாக ஓடினோம் (ஒரே நாளில் 15 கோவில்கள் என்றால் சும்மாவா?). இதில் வண்டியில் இருந்து முதலில் இறங்கி கடைசியாக வருபவர்கள், சன்னதி சன்னதியாக ஸ்லோகம் சொல்லி வழிபடுபவர்கள், கோவிலை சுற்றி வரும்போது நந்தவனத்தில் இருக்கும் செடிகளைப் பற்றி பேசி ஆராயும் பெண்களையும் கண்டேன்.

மேலும், தங்கள் குடும்பக் கதையை பேசிக்கொண்டும் மற்றும் தங்கள் முந்தைய பயணத்தைப் பற்றி பெருமையுடன் பேசிக்கொண்டு வரும் நண்பர்கள் கூட்டம், அடுத்து எங்கே? என்று ஒருங்கிணைப்பாளரிடம் கேட்டுக் கொண்டே வரும் சிலரும், மூலவருக்கு கண்டிப்பாக அர்ச்சனை செய்தே ஆக வேண்டும் என்ற பிடிவாதத்தில் இருப்பவர்கள் போன்ற பல வகையான புனித யாத்திரீகர்களைக் கண்டேன். சரி, இவர்கள் அனைவரும்

இறை அருள் தேடி அந்த இடங்களுக்கு வரவில்லை என்பதும், இது மாதிரி வந்தால் இறை அருள் கிடைக்காது என்று அடிக்கடி குருஜி கூறுவதையும் நினைவுபடுத்திக் கொண்டேன்.



மனித மனம் கண்டிப்பாக அனைவரையும் கவனித்து சில அபிப்ராயங்களை ஏற்படுத்திக் கொள்ளும் தானே! அதுபோலவே நானும் இவர்கள் எல்லோரும் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று யோசித்த போது,

நீ இவர்களை பற்றி அறிந்து கொள்ளவா இங்கு வந்தாய்?" என்கிற உட்குரல் பளார் என அறைந்தது. "நிகழ்வுகளோடு இணைந்திருங்கள். நிகழ்வை உருவாக்காதீர்கள்" என்ற குருஜியின் வார்த்தை நினைவிற்கு வந்தது.

இனி நான் எதைப்பற்றியும் யோசிக்காமல், அபிப்ராயங்களை உண்டாக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன். புலன்கள் அதனதன் வேலையே செய்து கொண்டுதான் இருந்தன, மற்றவர்களின் பேச்சுக்களும், நடவடிக்கைகளும் கவனித்தேன், ஆனால் சிந்தனையை அதன் மேல் ஓட விடவில்லை. அந்த அனுபவம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் ஏற்கனவே எடுத்துக்கொண்ட தீர்மானங்களினால் யாரிடமும் சென்று பேசவும் இல்லை, ஆனால் என்னிடம் வந்து பேசியவர்களுடன் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதிலளித்தேன். மனம் மெல்லமெல்ல அடங்கத் தொடங்கியது.

மதியத்திற்குள் மனம் லேசாக ஆனது போல, அனைத்து நிகழ்வுகளிலும் நான் இருக்கிறேன், வெறும் சாட்சியாக என்பது போலத் தோன்றியது. குருஜி கூறிய தனிமைப்பயணம் இவ்வளவு ஆனந்தமா என்பதை உணரத் தொடங்கினேன். இனி கண்டிப்பாக இதுபோல அந்நியர்களுடன் அவ்வப்போது பயணிக்க வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொண்டேன்.

குரு யோகி ஸ்ரீராம் பாபாவைப் போன்று எளிமையாக, நடைமுறை வழிமூலம் (Practical way) ஆத்ம ஞானத்தை போதிக்கும் குருவை அடைந்ததற்கு என்ன தவம் செய்தேனோ! என்கிற நன்றி பெருக்குடன் இந்த கட்டுரையை எழுதுகிறேன். குரு அனுக்கிரகத்தால் பயண ஒருங்கிணைப்பாளர் கூட இல்லாமல், விரைவில் பயணம் செய்ய தைரியம் வரவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இந்த அனுபவ பகிர்வை முடிக்கிறேன். தனிமையில் பயணம் வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஆனந்த அனுபவம். அனைவரும் கண்டிப்பாக இதை அனுபவிக்க வேண்டும்.

நன்றி! வணக்கம்! ●



சத்சித்ஆனந்தன்

ஸ்ரீநரசிம்ம ஸ்வாமிஜி அருளிய ஸ்ரீசாய் அஷ்டோத்திர சத நாமாவளியில் இருக்கும் நாமங்களான, ஆனந்தாய நம:

ஆனந்ததாய நம:, இந்த இரண்டு நாமாவளிகள் இடையில் ஒரே ஒரு எழுத்துதான் வித்தியாசம். ஆனால், அந்த ஒரு வித்தியாசத்தில்தான் எவ்வளவு பெரிய தத்துவம் பொதிந்திருக்கிறது.

இந்த இரண்டு நாமாவளிகளுக்கும் பொருத்தமாக பாபா நிறைய அதிசயங்களை நிகழ்த்தியிருக்கிறார்.

முதல் நாமாவளியின் பொருள் 'ஆனந்தமாக இருப்பவர்' என்பதாகும். அடுத்த நாமாவளியின் பொருள் 'ஆனந்தத்தை வழங்குபவர்' என்பதாகும். இரண்டையும் இணைத்து பொருள் கொள்ளும் போது, நாம் ஒருவரிடம் ஒன்றைக் கேட்டால், நாம் கேட்பது அவரிடம் இருந்தால்தான், அவரால் அதை நமக்குக் கொடுக்க முடியும். தன்னிடம் இல்லாத ஒன்றை அவரால் நமக்குத் தரமுடியாது.

சாயிநாதரிடம் நாம் கேட்பது நிச்சயமாகக் கிடைக்கும். ஏனெனில் ஆனந்தமாக இருப்பவரால் தான் ஆனந்தத்தை கொடுக்க முடியும்.

'அதுவும் பூர்ணம்; இதுவும் பூர்ணம்; அந்த பூர்ணத்தில் இருந்தே இந்த பூர்ணம் தோன்றி உள்ளது. பூர்ணத்தில் இருந்து பூர்ணத்தை எடுத்த நிலையிலும், பூர்ணம் அப்படியே இருக்கிறது' என்று யஜூர் வேதத்தில் கூறியிருப்பதைப்போல, ஆனந்தமயமாகவும் ஆனந்த சொரூபியாகவும் இருக்கும் சாயிநாதரிடம் இருந்து, நாம் ஆனந்தத்தைக் கேட்டுப் பெற்றாலும்கூட, அவரிடம் இருக்கும் ஆனந்தம் அணுவளவும் குறைந்துவிடப் போவதில்லை.

வாசகர் குரல்...



இம்மாத அமுத மொழி அற்புதமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது. எனக்கே எனக்கு என்று தனிப் பட்ட முறையில் என் ஞான குருயோகி ஸ்ரீராம் பாபா சொன்னதே இம்மாத அமுத மொழி யாக வந்திருந்தது மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. கதை வடிவில் சாய் சரிதம் அட்டகாசம். திரு. சுந்தர்சாய் அவர்களின் திருவருள் தேடியில் நமது குருவுடனான அனுபவத்தை பகிர்ந்தது அருமை. சுந்தர்சாய் அவர்களுக்கு நன்றி! இலஞ்சி சுவாமிகளின் தரிசனம் பெற்றேன். குருவுடன் ஏற்பட்ட அனுபவங் களை படிக்கும் பொழுது மகிழ்ச்சி அடைகிறேன். அனைத்தும் குரு அனைத்திலும் குரு.

திருமதி. தனம் அகஸ்டின், குன்றத்தூர்.

திரு. சுந்தர்சாய் அவர்கள் எழுதிய இம்மாத திருவருள் தேடி தொடரையும், திரு. அகஸ்டின் அவர்கள் எழுதிய இம்மையில் மருமை கட்டுரையையும் படித்த போதுதான் தெரிந்தது ஸ்ரீராம் பாபா யார் என்று. நாங்கள் குரு அவர்களுடன் 30 ஆண்டுகளாகப்

என்னுள்ளும் பல நினைவுகள்...

சுவாமிகள் பரிபூரணம் அடைந்த நட்சத்திரத்தில் நான் பிறந்துள்ளேன் என்பது எனக்கு பெருமையாக இருந்தது. மிக்க நன்றி குருவே!

– திருமதி. இந்துமதி, அயனாவரம்.

குரு அவர்களது கைவண் ணத்தில் வெளிவரும் சாய் சரிதம் படிக்கும் பொழுது வாழ்க் கையில் எது நடந்தாலும் அதை குருவிற்கு சமர்ப்பித்துவிட வேண்டும் என்பதை புரிந்து கொண்டேன். ஆன்மீக சேவை மற்றும் அகந்தை பெட்டிக் கதை எனக்கு சேவையைப் பற்றி புரிய வைத்தது. சுந்தர் சாய்ராம் அவர் கள் எழுதும் திருவருள் தேடியில் பயணிக்கின்றோம். ஆண்டுக்கு இரண்டுமுறை குரு அவர்கள் எங்கள் ஊர் குடந்தைக்கு வருகின்றார்கள். ஆனால் சாய்ராம் எழுதியதைப்போன்று தனக்கு எதுவுமே தெரியாது என்பதைப் போன்று இருந்து கொள்வார்கள். குரு அவர்களின் சேவைகளை தொட ரின் மூலம் வெளிப்படுத்திய திரு. சுந்தர் சாய், திரு.அகஸ்டின் அவர் களுக்கு கோடானு கோடி நன்றிகள்.

திரு. கமலநாதன், குடந்தை.

அமுதமொழி அழகிய மொழி, இம்மாத்தில் தொடங்கியிருக்கும் சங்கர் மகராஜ் சரித்திரம் அருமை. பொன்மொழிகள்

இனிமை. பெட்டிச்செய்திகள் சூப்பர். இருப்பினும் ஏதோ ஒன்று குறைவதுபோல் இருக்கின்றதே என்று யோசித்தேன். ஆமாம் இப்போதெல்லாம் பாபாவின் கதைகள் குறைந்துவிட்டதைப் போன்று தெரிகின்றது. சற்று அதிகப் படுத்தினால் நன்றாக இருக்கும்.

திருமதி. இந்திராணி, மதுரை.

திரு. அகஸ்டின் அவர்களின் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி எனக்கும் அநேக அனுபவங்கள் குருஜி ஸ்ரீராம் பாபா அவர்களால் ஏற்பட்டிருக்கின்றது. பல அனுபவங்கள் எனது தனிப்பட்ட வாழ்க்கையோடு தொடர்பு கொண்டிருப்பதால் அதை என்னால் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. கட்டுரையை படித்தபோது என்னுள்ளும் பல நினைவுகள் கரைபுரண்டோடின. குருஜி அவர்களுக்கு நன்றிகள் பல!

திரு. ஜான் ஆப்ரகாம், திண்டுக்கல்

வணக்கம் ஆசிரியர் அவர்களே! நான் கடந்த மூன்று மாதங்களாக சாய் மகராஜ் குருவைத்தேடி இதழைப் படித்து வருகின்றேன். ரொம்பவும் மனம் மகிழ்ச்சியாக இருக்கின்றது. உங்களது சேவை மகத்தானது. வாழ்த்துக்கள்.

திரு. ரமணிசந்திரன்,
மயிலாப்பூர்.

யோகி ஸ்ரீராம் பாபாவின் இனிய மொழிகள் அத்வைத வேதாந்தத்தின் சாரமாக இனிக்கின்றது. பாதுக்காகப்பட வேண்டிய அற்புத பொக்கிஷம். மற்ற கட்டுரைகள் அனைத்தும் அருமை. சாய்சரிதம் நன்கு புரியும்படி இருக்கின்றது. நன்றி!

திரு. கண்ணன், சென்னை.

குருவை தேடி மாத புத்தகத்தின் எல்லா தொடர்களும் ஆத்மஞானத்தை உணர்த்துவதே! ஆயினும் இம்முறை மிகவும் தெளிவாக திரு. நாராயணன் அவர்கள் எழுதிய புத்திக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பின் மூலம் ஞானம் எவ்வாறு சிதறி போகின்றது என்பதை உணர்த்தியது. திரு.அகஸ்டின் அவர்கள் எழுதிய இம்மையில் மறுமை என்ற கட்டுரையின் மூலம் குரு தம்முடைய சிஷ்யர்களை ஜென்ம ஜென்மமாக அறிவார் என்பதை உணர்த்தியது.

புத்தகத்தை திறக்கும்போது மூன்றாம் பக்கத்தில் இருக்கும் அமுதமொழியானது படிக்கும் நபருக்கே உரியதுபோலவும் நம் அருகிலேயே பகவான் இருப்பதுபோலவும் தோன்றுகிறது.

– திருமதி.சுகுணா ராஜசேகர்,
குரோம்பேட்டை.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால்
காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: 9941816692

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன்.அண்ணாநகர். ரூ.3000.
திருமதி. ஹோமாவதி நமசிவாயம், சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி. சுந்தரவள்ளி, சென்னை. ரூ.1500.
திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK. ரூ.1000.
திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.
திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.
திருமதி. அர்ச்சனா சாய். OMR.ரூ.1000.
திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.
திருமதி. சுபஸ்ரீ, கோவை. ரூ.800.

திரு. நவீன்குமார் வித்யா, பெங்களூர். ரூ.500.
திரு.லோகேஸ்வரி கார்த்திக், வாடிப்பட்டி. ரூ.500.
திரு.ஆனந்தன்- சாந்தகுமாரி, திருவந்தார். ரூ.500.
திரு. இராஜபாண்டியன், டி.கல்லுப்பட்டி. ரூ.500
திருமதி. SCV நித்யா, சென்னை. ரூ.500.
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திருமதி. பி. மகாலட்சுமி, மதுரை. ரூ.500.
திருமதி. நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திருமதி. சுகன்யா துரைராஜ். சென்னை. ரூ.500.
திருமதி. சாந்தி, மயிலாப்பூர். ரூ.500.
திருமதி. ஜெயஸ்ரீ கிருஷ்ணன். ரூ.500.
திருமதி. உமா மகேஸ்வரி. அயனாவரம். ரூ.500.
திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.400.
திருமதி. சரோஜா, பழைய சீவரம். ரூ.500.
திருமதி. பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திரு. தங்கவேல் ஆனந்தி, பழையசீவரம். ரூ.300
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.202.
திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.200
திரு. நிர்மலா, மனேஜர்,C.C பேங்க்,
பெரியார் நகர். ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் - டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர்.ரூ.100.
திருமதி.லலிதா, துரைப்பாக்கம், ரூ.100.
திருமதி.லதா, அயனாவரம்.ரூ.100
திருமதி. பிரியா, அயனாவரம். ரூ.101.
திருமதி. சபரிமா மணிகண்டன். ரூ.100.
திருமதி.ஷீலா ரூ.500.
திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ-1

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** – **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** – **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** – **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** – **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்

99418 16692, 88258 31068

'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068